# தொழில் துறை

# பெருந்தொழில்

# கொள்கை விளக்கக் குறிப்பு

*2021-2022*

**மானியக் கோரிக்கை எண்.27**

**தங்கம் தென்னரசு**

**தொழில் துறை அமைச்சர்**

©

**தமிழ்நாடு அரசு**

*2021*

# தொழில் துறை

# பெருந்தொழில்

## கொள்கை விளக்கக் குறிப்பு

*2021-2022*

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | *1-18* |
| *1.* | வழிகாட்டி நிறுவனம் | *19-56* |
| *2.* | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | *57-90* |
| *3.* | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | *91-112* |
| *4.* | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | *113-132* |
| *5.* | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | *133-144* |
| *6.* | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | *145-152* |
| *7.* | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | *153-168* |
| *8.* | சர்க்கரைத் துறை | *169-178* |

**தொழில் துறை**

**பெருந்தொழில்**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

*2021-2022*

**முன்னுரை**

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.84% பங்களிப்பை அளிப்பதன் மூலம், இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரம் உடைய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. கோவிட் தொற்று நோயால் ஏற்பட்ட பல இடையூறுகளுக்கு மத்தியிலும், 2020-21 நிதியாண்டில், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.28% ஆக இருந்தது. மற்ற தொழில்மயமான மாநிலங்களான ஆந்திரா, தெலுங்கானா, உத்தரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவை விட இது அதிகமாகும். இந்தக் காலகட்டத்தில், இந்திய அளவில், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3% ஆக குறைந்தது எனும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது எனலாம். மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இரண்டாம் நிலை துறைகளின் (Secondary Sector) பங்களிப்பு 29.5% ஆகும். இதில் உற்பத்தித் துறையின் பங்களிப்பு 18.2% ஆகும்.

பொருளாதார வளர்ச்சியில் ஒரு கலங்கரை விளக்கமாக தமிழ்நாடு திகழ்கின்றது. 2030-31 நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதை, ஒரு இலட்சிய இலக்காக தமிழ்நாடு நிர்ணயித்துள்ளது. இதன் மூலம், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில், தமிழ்நாடு தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும். இந்த இலக்கினை தமிழ்நாடு அடைய, ரூபாய் 23 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்திடவும், 46 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் வேண்டும். 2020-21ல் 48.1 பில்லியன் டாலராக இருந்த மாநில உற்பத்தித் துறையின் வளர்ச்சியை, 2030-31ம் வருடத்தில் 236 பில்லியன் டாலராக உயர்த்திட தமிழ்நாடு அரசு பெரும் முயற்சிகள் மேற்கொள்ளும்.

## 1. கண்ணோட்டம்

தமிழ்நாடு, ஒரு வலுவான தொழில் சூழல் அமைப்பினைக் கொண்டுள்ளது. வருடாந்திர கணக்கெடுப்புத் துறையின் (Annual Survey of Industries) புள்ளி விவரங்கள், தொழில் துறையில், தமிழ்நாட்டின் ஆதிக்க நிலையை தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

கீழேயுள்ள அட்டவணை, பல்வேறு அளவீடுகளில், தமிழ்நாட்டின் செயல்திறனைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை வழங்குகிறது :-

**அட்டவணை 1 – ASI 2018-19ன் அளவீடுகளின்படி தமிழ்நாட்டின் செயல்திறன்**

| அளவீடு | தமிழ்நாட்டின் தரவரிசை | மதிப்பு | முதலிடம் பெற்ற மாநிலம் | முதலிடம் பெற்ற மாநிலத்தின் மதிப்பீடு |
|---|---|---|---|---|
| தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | முதலிடம் | 38,131 தொழிற்சாலைகள் | - | - |
| வேலை வாய்ப்பு அளிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | முதலிடம் | 25,53,599 நபர்கள் | - | - |
| மொத்த உற்பத்தி | மூன்றாமிடம் | ரூ.9.39 இலட்சம் கோடி | குஜராத் | ரூ.16.19 இலட்சம் கோடி |
| மொத்த மதிப்புக் கூட்டு | மூன்றாமிடம் | ரூ.1.68 இலட்சம் கோடி | மஹாராஷ்டிரா | ரூ.2.32 இலட்சம் கோடி |
| முதலீடு செய்யப்பட்ட மூலதனம் | மூன்றாமிடம் | ரூ.4.22 இலட்சம் கோடி | குஜராத் | ரூ.9.23 இலட்சம் கோடி |

மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் (மின்சார வாகனங்கள் உட்பட), ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், இரசாயனங்கள் (ரப்பர் மற்றும் நெகிழி உட்பட), மின்னணு பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கட்டுருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியில், தமிழ்நாடு முன்னணி

மாநிலமாக விளங்குகிறது. பல்வேறு துறைகளில் உற்பத்தி மேற்கொள்ளப்படும் மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் நிலையையும், தரவரிசையையும் பின்வரும் அட்டவணை எடுத்துரைக்கிறது.

**அட்டவணை 2 - ASI 2017-18ன்அளவீடுகளின்படி பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டின் செயல்திறன்**

| துறை | தமிழ்நாட்டின் தரவரிசை | உற்பத்தி (ரூ. கோடியில்) | அகில இந்திய வெளியீடுகளில், தமிழ்நாட்டின் பங்களிப்பு (சதவீதத்தில்) | முதலிடம் பெற்ற மாநிலம் | முதலிடம் பெற்ற மாநிலத்தின் உற்பத்தி அளவு (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் & உதிரிபாகங்கள் | முதலிடம் | 1,88,603.23 | 23.03 | - | - |
| ஆயத்த ஆடைகள் | முதலிடம் | 44,175.20 | 33.47 | - | - |
| தோல் மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் | முதலிடம் | 15,677.30 | 28.34 | - | - |
| ஜவுளி | இரண்டாமிடம் | 92,422.84 | 22.05 | குஜராத் | 96,932.28 |
| இயந்திரங்கள் | இரண்டாமிடம் | 71,630.63 | 19.51 | மஹாராஷ்டிரா | 96,784.62 |
| மின்னணுவியல் | இரண்டாமிடம் | 30,052.02 | 15.07 | உத்திரப்பிரதேசம் | 62,521.02 |
| கட்டுருவாக்கப் பட்ட உலோகப் பொருட்கள் | இரண்டாமிடம் | 28,743.32 | 13.59 | மஹாராஷ்டிரா | 53,587.31 |
| ரப்பர் மற்றும் நெகிழிப் பொருட்கள் | மூன்றாமிடம் | 30,804.38 | 11.03 | மஹாராஷ்டிரா | 46,335.31 |
| உணவு பதப்படுத்துதல் | நான்காமிடம் | 96,035.55 | 8.65 | மஹாராஷ்டிரா | 1,50,135.06 |
| இரசாயனங்கள் | நான்காமிடம் | 36,104.34 | 5.46 | குஜராத் | 2,20,620.65 |

ஏப்ரல், 2020ஆம் ஆண்டு, 32.9 ஆக இருந்த தமிழ்நாட்டின் தொழில் உற்பத்திக் குறியீடு, 3.8 மடங்கு

அளவிற்கு உயர்ந்து, ஏப்ரல் 2021ஆம் ஆண்டு 126.1 ஆக உயர்ந்துள்ளது. இதே காலகட்டத்தில், 42.1 ஆக, இருந்த இந்தியாவின் தொழில் உற்பத்திக் குறியீடு வளர்ச்சி, 125 ஆக, 2.9 மடங்கு என்ற குறைந்த விகிதத்தில் மட்டுமே வளர்ச்சி கண்டுள்ளது.

ஒரு வலுவான உற்பத்தி மையமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், ரூபாய் 1.93 இலட்சம் கோடி ஏற்றுமதியுடன், தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாகவும் விளங்கி வருகின்றது. 2020-21ஆம் ஆண்டிற்கான அகில இந்திய அளவிலான ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.97% ஆகும். மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், இயந்திரங்கள், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள், தோல் மற்றும் மின்னணுவியல் பொருட்கள் ஆகியவை மாநிலத்தின் முக்கியமான ஏற்றுமதிப் பொருட்களாகும். தமிழ்நாட்டின் பெரும்பாலான ஏற்றுமதிகள், அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகிறது.

ஹூண்டாய், ப்யூஜோ, BMW, டெய்ம்லர், கேட்டர்பில்லர், அசோக் லேலண்ட், TVS, ரெனால்ட்

நிஸ்ஸான், ஃபாக்ஸ்கான், டெல்டா, டெல், சால்காம்ப், டாட்டா எலெட்ரானிக்ஸ், சியட், மிச்செலின், *MRF*, கிரண்ட்ஃபோஸ் மற்றும் *L&T* ஆகிய எண்ணற்ற உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள், தங்களது உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன. மேலும், *75*க்கும் மேற்பட்ட பார்ச்சூன் *500* நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது, தமிழ்நாட்டின் மீது முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குச் சான்றாக விளங்குகிறது.

## *2.* முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு

அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்திடுவதில், ஒரு முன்னணி மாநிலமாக, தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகிறது. ஏப்ரல் *2000* முதல் மார்ச் *2021* வரையிலான காலகட்டத்தில், *34.5* பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்த்திடும் முன்னணி மாநிலங்களில், தமிழ்நாடு முதல் ஐந்து மாநிலங்களில் ஒன்றாக தொடர்ந்து விளங்கி வருகிறது.

கோவிட் தொற்று மிகவும் பாதித்திருந்த சூழ்நிலையில் கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் திறமையான தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசால் அதிக அளவில் முதலீடுகளை ஈர்க்க முடிந்தது. 2021-22ஆம் நிதியாண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில், ரூபாய் 17,141 கோடி முதலீடுகள் மற்றும் 55,054 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற அளவிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதே இதற்குச் சான்றாக அமைகிறது. மேலும், முதலீட்டாளர்கள் மாநிலத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் இது எடுத்துக் காட்டுகிறது.

3. **செயல்திறன் மிகுந்த நிர்வாகம்**

அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையிலும், தொலை நோக்குப் பார்வையின் அவசியத்தினை அங்கீகரிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசு, தொழில் கொள்கையில் பல சிறப்பம்சங்களை உட்புகுத்தி, ஒரு புதிய தமிழ்நாடு தொழில் கொள்கை 2021ஐ அறிமுகப்படுத்தி உள்ளது. வெளிப்படைத் தன்மை, புதிய அம்சங்கள் மற்றும் நெகிழ்வுத் தன்மை போன்ற முதலீட்டாளர்கள் விரும்பும் அனைத்து அம்சங்களும் இருக்கும் வகையில், இந்த தொழில் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக,

ஏற்றுமதிக்கான திட்டங்கள், உயிர்வாழ் அறிவியல்-ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் உற்பத்திக் கொள்கை, நிதித் தொழில் நுட்பக் கொள்கை போன்ற பிற கொள்கைகளையும் வெளியிட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் துறைகளில் அரசின் தற்போதைய நிலையை வலுப்படுத்துவதற்கு இவை பெரும் உதவிகரமாக இருக்கும்.

வணிக நிறுவனங்களுக்குத் தேவையான 286 இணக்கங்களை குறைத்திடவும், எளிதாக்கிடவும், தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாக பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. வணிக சீர்திருத்த நடவடிக்கைத் திட்டம் (BRAP) 2020ன் ஒரு பகுதியாக, 301 சீர்திருத்தங்களும், மாவட்ட சீர்திருத்த நடவடிக்கைத் திட்டத்தின் (DRAP) ஒரு பகுதியாக 45 சீர்திருத்தங்களும் (112 சேவைகள்), தமிழ்நாடு அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, 24 துறைகளைச் சார்ந்த 100 சேவைகளை உள்ளடக்கிய ஒற்றைச் சாளர இணையதளம் - 2.0 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.07.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 2022ஆம் வருடத்திற்குள்,

மேலும் 100 சேவைகள், இந்த இணையதளத்தில் சேர்க்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் முதலீட்டை ஊக்குவிக்கவும், முதலீட்டாளர்கள் வசதி சேவைகள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளையும் ஆய்வு செய்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

## 4. தேசிய அளவிலான அடையாளம்

பல்வேறு அம்சங்களில் தனியார் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், அகில இந்திய அளவில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்வதை சுட்டிக்காட்டியுள்ளன.

- நிர்வாகம் மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் மாநிலங்களை மதிப்பிடுவதற்கு, நல்லாட்சிக் குறியீடு (Good Governance Index) மேற்கொள்ளப்படுகிறது. 2019ல் இந்த மதிப்பீட்டில், அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளி,

தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. பொது விவகார மையம் *(Public Affairs Centre)* வெளியிட்ட பொது விவகாரங்கள் குறியீடு *(Public Affairs Index) 2020*ன்படி, ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையின் அடிப்படையில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

- நிதி ஆயோக் *2020-21*ஆம் ஆண்டுக்கான நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் இந்தியா குறியீடு *(NITI Aayog's Sustainability Development Goals India Index 2020-21)* தரவரிசையில், தமிழ்நாடு மூன்றாம் இடத்திலிருந்து, தற்போது இரண்டாம் இடத்திற்கு முன்னேறி உள்ளது.
- கொள்கை, வணிகச் சூழல் அமைப்பு, ஏற்றுமதி சூழல் அமைப்பு, ஏற்றுமதியின் அளவு போன்ற அளவீடுகளில் மாநிலங்களை மதிப்பிடும் நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி ஆயத்தப்படுத்தல் குறியீடு-*2020 (Export Preparedness Index 2020)* தரவரிசையில், தமிழ்நாடு மூன்றாம் இடம் பிடித்துள்ளது.

- இந்தியா திறன் அறிக்கை *2020* (*India Skills Report 2020)*படி, அதிக வேலைவாய்ப்பு உள்ள மாநிலங்களின் அடிப்படையில், தமிழ்நாடு இரண்டாம் இடத்தினைப் பிடித்துள்ளது. வேலை வாய்ப்புகள் அதிக அளவில் அளித்திடும் முதல் *10* நகரங்களில், சென்னை இடம் பிடித்துள்ளது.
- மத்திய அரசால் தொடங்கப்பட்ட இந்திய வணிக செயல்முறை அவுட்சோர்சிங் ஊக்குவிப்பு திட்டத்தின் (*India Business Process Outsourcing Promotion Scheme)* கீழ், புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கத்தில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு *2*வது இடத்தில் உள்ளது.
- நிதி ஆயோக் வெளியிட்ட இந்தியா புத்தாக்கக் குறியீடு *2020*ல் (*India Innovation Index 2020)*, தமிழ்நாடு *3*வது இடத்தில் உள்ளது.
- இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட எளிதான வாழ்வு அட்டவணை *(Ease of Living Index)*, வாழ்க்கைத் தரம், பொருளாதாரத் திறன்,

நிலைத்தன்மை போன்ற 13 பிரிவுகளை, நகரங்களைப் பரிசோதிப்பதற்கும் தரவரிசைப்படுத்துவதற்கும் பயன்படுத்துகிறது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் முதல் 10 நகரங்களின் வரிசைப் பட்டியலில், சென்னை மற்றும் கோயம்புத்தூர் முறையே 4வது மற்றும் 7வது இடங்களை பிடித்துள்ளன. 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் வசிக்கும் முதல் 10 நகரங்களின் பட்டியலில், சேலம் மற்றும் வேலூர், முறையே 5வது மற்றும் 6வது இடம் பிடித்துள்ளன.

**5. உள்கட்டமைப்பு**

முதலீட்டாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளை அமைப்பதற்காகத் தேவைப்படும் சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு வழங்கி வருகிறது. 2,13,096 கி.மீ. அளவிற்கான மாநில நெடுஞ்சாலை மற்றும் 17,000 கி.மீ அளவிற்கான தேசிய நெடுஞ்சாலைகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. 4 பெரிய துறைமுகங்கள் மற்றும் 4 சர்வதேச விமான நிலையங்கள் என்ற வகையில், மாநிலத்தில் பல ஏற்றுமதி நுழைவாயில்களையும் தமிழ்நாடு

கொண்டுள்ளது. சென்னை துறைமுகம், வ.உ.சி துறைமுகம், காட்டுப்பள்ளி துறைமுகம், காமராஜர் துறைமுகம் மற்றும் சென்னை விமான நிலையம் போன்றவை, மாநிலத்தின் முக்கிய ஏற்றுமதி நுழைவாயில்களாகும்.

மேலும், தமிழ்நாட்டில் *4* தொழில் பெருவழிகள் அமைக்கப்பட உள்ளன. அவை, சென்னை - கன்னியாகுமரி தொழில் பெருவழி, சென்னை - பெங்களூரு தொழில் பெருவழி, பெங்களூரு-கொச்சி தொழில் பெருவழி மற்றும் தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் பெருவழி ஆகிய *4* தொழில் பெருவழிகளும், மாநிலம் முழுவதும் பரவலாக அமையும்.

மேலும், நாட்டிலேயே இரண்டாவது என்ற வகையில் (மஹாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக), தமிழ்நாட்டில் *6* கடல் அடித்தள கேபிள் இணைப்புகள் அமைந்துள்ளன. *14.8 Tbps* (ஒரு வினாடிக்கு டெரா பைட்டுகள்) என்ற அளவில் பிராட்பேண்ட் இணைப்புகளை வழங்குவதன் மூலம், அகில இந்திய அளவில் அதிக அலைவரிசை அளித்திடும் மாநிலமாக, தமிழ்நாடு விளங்குகிறது.

## 6. தொழிற்பூங்காக்கள் மற்றும் நில வங்கிகள்

தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிற் பூங்காக்களில் சுமார் 40,000 ஏக்கர் பரப்பளவில் நிலவங்கிகள் உள்ளன. தொழில் ரீதியாக பின்தங்கிய மாவட்டங்களில் கவனம் செலுத்தி, அத்தகைய மாவட்டங்களில் தொழிற்பூங்காக்களை அமைப்பதன் மூலம், இந்த நிலக் கையிருப்பினை அதிகரித்திடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

சிப்காட் பூங்காக்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி மேற்கொண்டோ ஆயத்த தொழிற்கூடங்கள் *(Plug & Play)* போன்ற புதிய மாதிரிகளையும், அரசு செயல்படுத்தி வருகின்றது. தொழிலாளர்களின் பங்களிப்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக, தொழில் பூங்காக்களின் அருகாமையிலேயே, வீட்டு வசதிகள் அமைத்துத் தருவதை தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கிறது. மேலும், மாநிலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கு மேம்பட்ட சூழல் அமைப்பை வழங்கிடும் வகையில், குறிப்பிட்ட நாடுகளுக்கு ஏற்றவாறு

ஒருங்கிணைந்த தொழில் நகரியங்களை நிறுவிடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## 7. மனிதவள மூலதனம்

பல்வேறு பாடத்திட்டங்களை வழங்கிடும் 2400-க்கும் மேற்பட்ட கல்லூரிகளையும், நமது நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களையும் கொண்டிருப்பதால், உயர் கல்வியின் கோட்டையாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. மாநிலத்தில், 450க்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழிற் பயிற்சி அளித்து வருகின்றன. இவற்றில், ஏறக்குறைய 85% தொழிற்பயிற்சி நிலையங்கள் தனியார் துறையைச் சார்ந்தது என்பதன் மூலம், இப்பயிற்சிகளில், தனியார் துறையின் ஆழமான ஈடுபாடு வெளிப்படுகிறது.

அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு 2019-20 (*All - India Survey of Higher Education 2019-20*) புள்ளிவிவரங்களின்படி, சான்றிதழ் படிப்புகளிலிருந்து முதுகலைப் பட்டம் வரையிலான பல்வேறு நிலைகளில் தகுதிபெற்று, ஏறக்குறைய 9,00,000 மாணவர்கள் ஆண்டுதோறும் வெளிவருகின்றனர். இவ்வாறு திறன் மிகுந்த மற்றும்

உயர்கல்வி பயின்ற பணியாளர்கள் நமது மாநிலத்தில் கிடைத்திடுவதால், முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களுக்கு, இது ஒரு முக்கிய ஈர்ப்பாக விளங்குகிறது என்று கூறலாம்.

## 8. ஒருங்கிணைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை

தமிழ்நாட்டில், அதிக அளவில் உள்ள பெரிய தொழிலகங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் மிக வலுவானதாக அமைந்துள்ளன. உத்யோக் ஆதார் பதிவுகளில், 2வது அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள பல்வகையான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, வலுவான விற்பனையாளர் சூழல் அமைப்பை வழங்கி வருகிறது.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், தேசிய மற்றும் உலக அளவில் மாநிலம் முக்கியத்துவம் பெறுவதற்கும், தொழில் வளர்ச்சி மற்றும் சேவைகள் முக்கிய காரணிகள் ஆகும். உற்பத்தி மற்றும் சேவைகள் என்பது, ஒரு மாநிலத்தின் மேம்பாட்டிற்கான இரட்டை வளர்ச்சி

இயந்திரங்களாக கருதப்படுகின்றன. ஏனெனில், உற்பத்தி மற்றும் சேவைகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு அதிக அளவிலான பெருக்க விளைவை *(high multiplier effect)* அளிக்கின்றன. உள்நாட்டில் நுகர்வு ரீதியான வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் உலகளவில் ஏற்றுமதி சந்தைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தித்திறனையும், குறைந்த செலவில் அளிக்கும் சேவைகளையும், மேம்படுத்திக்கொள்ள அரசு பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் பெருமளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்த்து, நேர்மறையான பொருளாதார சமநிலைக்கு *(Positive balance of payments)* வழிவகுத்துள்ளது.

மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள், தொழில் துறையில் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கென, உயர் மதிப்பு உள்ள பெரிய தொழில் வாய்ப்புகளைக் குறிவைத்து, உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், தற்போது இயங்கி வரும் வேலை வாய்ப்புகள் அதிகம் அளிக்கவல்ல நிறுவனங்களுக்கு தேவையான ஆதரவு அளிப்பது; வளர்ந்து

வரும் துறைகளான நிதி நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வருங்கால நகர்திறன் *(Future mobility)*, மின்னணு வன்பொருள் உற்பத்தி, தகவல் தரவு மையங்கள் போன்ற துறைகளுக்கு ஆதரவளிப்பது போன்றவற்றை முன்வைத்து, வளர்ச்சித் திட்டங்கள் வரையறுக்கப்படுகின்றன. கொரோனா பெருந்தொற்று காலத்தில் இந்த விநியோகச் சங்கிலிகளை சீரமைக்கும் முயற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. தொழில் துறை *4.0* மற்றும் புத்தொழில்கள் போன்ற உற்பத்திப் போட்டித்திறன் அதிகரிக்கும் துறைகளுக்கு ஊக்கமளித்திட, தமிழ்நாடு அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. செயல்திறன் மிக்க கொள்கைகள் வகுத்தல், ஒழுங்குமுறை இணக்கச் சுமைகளைக் குறைத்தல் மற்றும் எளிதாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம், இந்த இலக்கினை அடைய அரசு முனைந்துள்ளது. மேலும், நீடித்த, புதுமையான, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அடைவதோடு மட்டுமின்றி, மாநிலம் முழுவதும் பரவலான வளர்ச்சி அடைந்திட வேண்டும் என இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

# 1. வழிகாட்டி நிறுவனம்

வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்), தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 1992ல் இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக ரூபாய் ஐந்து இலட்சம் கோடி அளவிற்கும் மேலான முதலீடுகளை வெவ்வேறு துறைகளில் ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டில் முதலீடு, புத்தாக்கம் மற்றும் உருவாக்கம் என்ற வகையில், முதலீட்டாளர்களுக்கான முதலீட்டுச் சூழல் அமைப்பினை மாற்றியமைத்திட வழிகாட்டி நிறுவனம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

## 1.1 கொள்கை இலக்கு

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், தொழில் முனைவோர்க்குத் தேவைப்படும் தகவல்களை அளிப்பதற்கும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தேவையான உதவிகளை வழங்குவதற்கும் முகவாண்மை நிறுவனமாக, வழிகாட்டி நிறுவனம்

நிறுவப்பட்டது. தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018-ன் படி, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை / நிறுவனம் சார்ந்த தொழில் அனுமதிகளை குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்கும், சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகை வழங்குவதற்குமான முகவாண்மை நிறுவனமாகவும், வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் நியமிக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக விளங்கும் வழிகாட்டி நிறுவனம், முதலீடுகளை எளிதாக்குவதற்கும், வருங்கால முதலீட்டாளர்களை மாநிலத்தில் முதலீடு மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கும், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:-

- **முதலீடு ஊக்குவிப்பு** – அனைத்து உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல்; முதலீடு வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றை முதலீடுகளாக உருமாற்றி, அதன் மூலம் மாநிலத்தில் வேலைவாய்ப்பினை அதிக அளவில் உருவாக்குதல் மற்றும் நாடுகளுக்கான அமைவுகள் மூலம் முதலீட்டு ஊக்குவித்தல்.

- **முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்**- தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முனைந்திடும் முதலீட்டாளர்களுக்கு, அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்குதல், வணிகம் புரிதலை எளிதாக்குவதற்காக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுதல், ஒற்றைச் சாளர இணையதளம் மற்றும் தொழில் தோழன் *(Biz Buddy)* போன்ற இணைய தளங்களை நிர்வகித்தல், ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து வைத்தல்.
- **வெளிப்புற ஈடுபாடுகள்** - சர்வதேச முதலீட்டாளர்களிடம் தொடர்புகள் மேற்கொண்டு, உலகளாவிய முதலீட்டுச் சந்தையில் தமிழ்நாட்டினை நிலைநிறுத்துதல்; இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் முதலீட்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- **கொள்கை மற்றும் ஆராய்ச்சி** – பண்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, தொழில் மற்றும் முதலீட்டுக்

கொள்கைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்த தேவையான பரிந்துரைகளை வழங்குதல்; மாநிலத்தின் பொருளாதாரம், தொழில் மற்றும் முதலீடுகள் ஆகிய துறைகளை கூர்ந்து கண்காணித்தல்; அரசின் சிந்தனைக் களமாக செயல்படுதல்.

- **மண்டலங்களைச் சென்றடைதல்** – மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகள் மற்றும் மாவட்டங்களில் உள்ள முதலீட்டாளர்கள், தொழில் அமைப்புகள் மற்றும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்குதல், முதலீட்டாளர்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு, அவர்களின் குறைகளை தொழில் தோழன் இணையம் மூலம் தீர்த்துவைத்தல்.
- **ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு** – முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை மேம்படுத்திட, சமூக ஊடகங்கள், டிஜிட்டல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக மாநிலத்தின் முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுதல்.

## 1.2 கோவிட் மேலாண்மை மற்றும் மீட்பு முயற்சிகள்

தொழில் துறையின் வழிகாட்டுதலின் பேரில், வழிகாட்டி நிறுவனம், பிற அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து, கோவிட் தொற்றினால் தொழிற்சாலைகள் அதிக அளவில் பாதிக்கா வண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுத்திட, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.

### 1.2.1 கோவிட் உதவி சேவை மையம்

முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நேரத்தில், வழிகாட்டி நிறுவனம் அல்லும் பகலும் செயல்பட்டு, 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளக்கூடிய இரண்டு உதவி சேவை மையங்களை அமைத்தது. மாவட்ட / மாநில எல்லைகளில் வாகன இயக்கங்கள் தேக்கம், எல்லைகளில் சிக்கியிருந்த மளிகை சாமான்கள் மற்றும் சமையல் பொருட்கள் தேக்கம், தொழிற்சாலைகளை செயல்பட / பராமரிக்க அனுமதி, வாகனங்களும் ஊழியர்களும் இயங்குவதற்கான அனுமதிகள், விமான நிலையங்களில் சிக்கியிருந்த ஏற்றுமதி பொருட்கள் போன்ற சிக்கல்களுக்கு தீர்வும்,

தெளிவும் பெற்றிட, இந்த உதவி சேவை மையங்கள் பெரும் உதவி புரிந்தன. தொற்றுநோயின் பாதிப்பு உச்சகட்டத்தில் இருந்த நேரத்தில், *2021-22* நிதியாண்டின் முதல் காலாண்டில், *4,000*க்கும் மேற்பட்ட உதவி அழைப்புகள் வரப்பெற்று, அவற்றிற்கு தீர்வுகள் காணப்பட்டன. *200*க்கும் மேற்பட்ட *PPE*, வென்டிலேட்டர்கள் மற்றும் *N95* முகக்கவசங்கள் ஆகிய பொருட்களின் விநியோகஸ்தர்களை தொடர்பு கொண்டு, இப்பொருட்களின் விநியோகத்தை எளிதாக்கியது. மேலும், கொரியா, டென்மார்க், ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, தைவான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தூதர்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு, உதவி மையங்களை நிறுவியது. இதன் மூலம், அந்த நாட்டு முதலீட்டாளர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் உடனடியாக தீர்த்து வைக்கப்பட்டன.

### *1.2.2* மருத்துவ ஆக்சிஜன் மற்றும் ஆக்சிஜன் செறிவூட்டிகள் விநியோகத்திற்கு உதவி

ஐனாக்ஸ் நிறுவனம், இந்திய ரயில்வே மற்றும் பிற தொடர்புடையோரின் உதவியுடன், *4 ISO* கொள்கலன்கள், நெதர்லாந்திலிருந்து மேற்கு வங்கத்திற்கு விமானம் மூலம்

கொண்டு வரப்பட்டன. இந்த கொள்கலன்களில், திரவ ஆக்சிஜன் நிரப்பப்பட்டு, அவை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. பல நிறுவனங்களும், வர்த்தக அமைப்புகளும், ஆக்சிஜன் செறிவூட்டிகளை பெருமளவில் நன்கொடையாக வழங்கிட முன்வந்தன. *US India Strategic Partnership Forum (USISPF) 486* செறிவூட்டிகளை, சீனாவில் உள்ள ஃபோஷானில் இருந்து விமானம் மூலம் வரவழைத்து, தமிழ்நாட்டிற்கு வழங்கியது. மிகப் பெரிய கொரிய நாட்டு நிறுவனங்களான, ஹுண்டாய் மற்றும் சாம்சங் ஆகிய நிறுவனங்கள், *300*க்கும் மேற்பட்ட ஆக்சிஜன் செறிவூட்டிகளை வழங்கின. ஆக்சிஜன் உற்பத்தி நிறுவனங்களில் இருந்து மருத்துவ ஆக்சிஜனை உற்பத்தி செய்வதற்கான ஆலையாக மாற்றிடுவதற்கான உரிமங்கள் மூன்று நிறுவனங்களுக்கு உடனுக்குடன் வழங்கப்பட்டன. இதன் பயனாக, மாநிலத்தில் கூடுதலாக *15* மெட்ரிக் டன் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

கொரோனா இரண்டாவது அலையின்போது ஆக்சிஜன் தேவை வெகுவாக அதிகரித்தது. முன்பு எப்போதும் இல்லாத வகையில் ஆக்சிஜன் தேவையினை

பூர்த்தி செய்யும் பொருட்டு, சத்தீஸ்கர், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து திரவ ஆக்சிஜன் கொண்டுவருவதற்கு சிறப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. மேற்கண்ட மாநிலங்களில் இருந்து 5751.99 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்சிஜன், சாலை மற்றும் இரயில் மார்க்கமாக கொண்டுவரப்பட்டது.

### 1.2.3 தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடுதல்

சிப்காட், மாவட்ட தொழில் மையங்கள், சுகாதாரத் துறை மற்றும் பல்வேறு வர்த்தக அமைப்புகளுடன் இணைந்து, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம், மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டது. இந்த முயற்சியில், 45 வயதுக்கு மேற்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.05.2021 அன்று, திருப்பூர் நேத்தாஜி ஆயத்த ஆடைகள் பூங்காவில் இத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, மிகப்பெரிய மோட்டார் வாகன நிறுவனமான

டெய்ம்லர் இந்தியா நிறுவனத்தின், ஒரகடத்தில் உள்ள அதன் உற்பத்திப் பிரிவில், அந்தப் பகுதியினைச் சேர்ந்தவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு வசதியாக, ஒரு தடுப்பூசி மையத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் *26.05.2021* அன்று திறந்து வைத்தார்கள்.

### *1.2.4* ஆக்சிஜன் உற்பத்தியை ஊக்குவிக்க சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகை

கோவிட் *19* தொற்றின் இரண்டாவது அலை காரணமாக, மருத்துவ ஆக்சிஜன் உபயோகம் பெருமளவில் அதிகரித்தது. இச்சூழ்நிலையை கருத்தில் கொண்டும் ஆக்சிஜன் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையிலும், ஒரு சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகையினை தமிழ்நாடு அரசு அறிவித்தது. தமிழ்நாட்டில் ஆக்சிஜன் செறிவூட்டிகள், சிலிண்டர்கள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி செய்திடும் தொழிற்சாலைகளுக்கு *30%* மூலதன மானியத்தை *2* சம தவணைகளில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. நில ஒதுக்கீட்டில் முன்னுரிமை, கடன்களுக்கான வட்டி தள்ளுபடி மற்றும் ஒற்றைச் சாளர இணையம் மூலம் அனுமதி போன்ற கூடுதல் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. நாட்டிலேயே முதல் முறையாக

தமிழ்நாட்டில் தான் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தியை ஊக்குவிக்க ஒரு சிறப்பு தொகுப்புச் சலுகை வழங்கப்பட்டது.

### *1.3* முதலீட்டு மேம்பாடு (உற்பத்தி மற்றும் சேவைகள்)

வழிகாட்டி நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தவிர்த்து, அனைத்து நிறுவனங்களின் முதலீடுகளை மாநிலத்திற்கு ஈர்த்திடுவதற்கான முகவாண்மை நிறுவனமாகும். மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், இரசாயனங்கள், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், கனரக பொறியியல், தோல் பொருட்கள், ஆடைகள், நிதிச் சேவைகள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற துறைகளிலும், வளர்ந்து வரும் துறைகளான வான்வெளி மற்றும் பாதுகாப்பு, வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உபகரணங்கள், *ESDM*, மருத்துவ சாதனங்கள், மின் வாகனங்கள், உயிரி தொழில் நுட்பம், மருந்துகள், பெட்ரோ கெமிக்கல்ஸ் மற்றும் சிறப்பு இரசாயனங்கள், காலணி, தொழில் நுட்பம், ஜவுளி, தகவல் தரவு மையங்கள் மற்றும் நிதி நுட்ப நிறுவனங்கள் ஆகிய உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பது

வழிகாட்டி நிறுவனத்தின் முக்கிய பணியாகும். நாடுகளுக்கான அமைவுகள், துறைகளுக்கான அமைவுகள் மற்றும் முதலீட்டு மாநாடுகள் மூலம் இவ்வாறான முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள் வழிகாட்டி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.3.1 நாடுகளுக்கான அமைவுகள்

அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சீனா, கொரிய குடியரசு, ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய நாடுகளுக்கான பிரத்யேக அமைவுகளை வழிகாட்டி நிறுவனம் துவங்கி உள்ளது. தைவான் நாட்டு அமைவுக்கு, ஒரு முழு நேர வழிகாட்டி ஊழியர் தைவானிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளார். வெவ்வேறு நாடுகளின் முதலீட்டாளர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முதலீடுகளை ஈர்த்திடுவதற்கு ஏதுவாக, வழிகாட்டி நிறுவனத்தில் உள்ள மேலாளர்களுக்கு, நாடுவாரியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவைத் தவிர, தலைநகர் புதுதில்லியில் பல்வேறு மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுடன் இணைந்து செயல்புரியும்

வகையில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு அமைவு உருவாக்கப்பட்டுள்ளது.

புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளில், புத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக, அமெரிக்க தமிழ் தொழில் முனைவோர் சங்கத்துடன் *(ATEA)*, வழிகாட்டி நிறுவனம், ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. டிஜிட்டல் ஆக்ஸிலரேட்டர் திட்டம் மூலம், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள புத்தொழில்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், *75* விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில், *CoreStack*, *Atsuya Technologys*, *Pacifyr*, *Swire Pay*, *Plethy* ஆகிய *5* நிறுவனங்கள், மானியங்கள் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

### *1.3.2* துறை / பிரிவு வாரியான முதலீட்டுக் குழுக்கள்

வழிகாட்டி நிறுவனத்தில், மோட்டார் வாகனங்கள், உணவு பதப்படுத்துதல், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் உற்பத்தி, கனரக பொறியியல், ஜவுளி மற்றும் ஆடை, இரசாயனங்கள், தகவல் தொழில் நுட்பம் /

தகவல் தொழில் நுட்பச் சேவைகள் மற்றும் மருந்துகள் போன்ற 12 மிக முக்கியமான துறைகளில் முதலீடுகளை ஈர்த்திடுவதற்காக, 6 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், முதலீடு வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றை முதலீடுகளாக உருமாற்றி, அதன் மூலம் மாநிலத்தில் வேலைவாய்ப்பினை அதிக அளவில் உருவாக்கும் பணிகளை மேற்கொள்கின்றன.

### 1.3.3 நிதிநுட்பப் பிரிவு

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைச்சர், 13.08.2021 அன்று தனது தொடக்க நிதிநிலை அறிக்கை உரையின் போது, நிதிநுட்பம், உலகளாவிய செயல்திறன் மையங்கள் *(Global Capability Centres)* மற்றும் தகவல் தரவு மையங்கள் ஆகிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கவும், ஆதரவளிக்கவும், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு பிரத்யேக "நிதிநுட்பப் பிரிவு" அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த துறைகளில், முதலீடுகளை ஈர்ப்பதற்கு, மாநிலத்தின் திறனை சரியான வகையில் பயன்படுத்துவதன் மூலம், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறையில், முன்னணி இடமாக, தனது

நிலையை தமிழ்நாடு நிலை நிறுத்திட இயலும். கடந்த ஆண்டில், தகவல் தரவு மையங்களில் ரூபாய் 18,000 கோடிக்கும் மேலான முதலீடுகளை, வழிகாட்டி நிறுவனம் ஈர்த்துள்ளது.

வழிகாட்டி நிறுவனத்தின் பணியாளர்கள் மற்றும் தொழிலகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு, நிதிநுட்ப பிரிவு உருவாக்கப்படும். இத்துறையில் உள்ள தொழில் இணைப்புகளை மேம்படுத்திடவும், முதலீடுகளை ஈர்த்திடவும் இது பெருமளவில் உதவிடும்.

### 1.3.4 ஏற்றுமதி பிரிவு

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு முதலீட்டுப் பணிக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், வழிகாட்டி நிறுவனத்தில், "ஏற்றுமதி பிரிவு" கீழ்க்கண்ட பணிகளுக்காக அமைக்கப்பட்டு வருகிறது:-

- வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களை, கலந்தாலோசிக்கும் வகையிலான ஒரு அமைப்பை உருவாக்குதல்;
- மாநிலத்திலிருந்து செய்யப்படும் ஏற்றுமதிகளை வலுப்படுத்தி, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும்

சர்வதேச வர்த்தகத்திற்கான ஆதரவுகளை தீவிரமாக மேற்கொள்ளுதல்;

- ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு, ஆதரவு சேவைகளை வழங்குதல்; அவர்களின் ஏற்றுமதி தொடர்பான கேள்விகளுக்கு தெளிவு வழங்குதல்; ஏற்றுமதி தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

### 1.3.5 "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு"- முதலீட்டு மாநாடு, ஜுலை 2021

தொழில் துறை சார்பில் "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" என்ற சிறப்பான நிகழ்ச்சியை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் வழிகாட்டி நிறுவனம் நடத்தியது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சங்களாக, ரூபாய் 17,141 கோடி முதலீட்டில், 55,054 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில், 35 தொழில் முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ரூபாய் 4,250 கோடி முதலீட்டில் 21,630 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 9 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் ரூபாய் 7,117 கோடி முதலீட்டில், 6,798 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை

உருவாக்கும் வகையில் 5 திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த முதலீடுகள், புதுப்பிக்கத்தக்க மின்சக்தி, மின்னணுவியல், மோட்டார் வாகன உதிரிபாகங்கள், தொழில் பூங்காக்கள், தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள், பொது உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், காலணிகள், மருத்துவப் பொருட்கள், ஜவுளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டன. திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை என்று தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், இந்தத் திட்டங்கள் பரவலாக அமைய உள்ளன.

### 1.3.6 உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015 & 2019

தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடுகள் சென்னையில் நடத்தப்பட்டன. இதன்

மூலம் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டதோடு, வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டன.

## 1.4 முதலீடுகளை எளிதாக்குதல் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

### 1.4.1 வணிகம் புரிதலை எளிதாக்குதல்

வணிக சீர்திருத்த செயல் திட்டத்தின் மூலமாக 301 சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலாக, மாவட்ட சீர்திருத்த செயல் திட்டம் (DRAP) மூலமாக 45 சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சீர்திருத்தங்களைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து பரிசீலிக்கும் வகையில், அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

### 1.4.2 இணக்கச் சுமைக் குறைப்பு *(Reduction in Compliance Burden)*

ஒழுங்குமுறை இணக்கங்கள், முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வணிகங்களின் அன்றாட செயல்பாடுகளுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையிலும், பெருந்தடையாகவும் செயல்படுகின்றன. இதனால், முதலீட்டாளர்களுக்கு உகந்த ஒரு சிறந்த சூழல் அமைப்பை வழங்கக்கூடிய மாநிலத்தின்

திறன் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. ஆகவே, இவ்வாறான ஒழுங்குமுறை இணக்கங்களின் கட்டமைப்பினை எளிமையாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவது மிக அவசியமாகிறது.

வணிகங்களுக்குத் தேவையான *286* இணக்கங்களைக் குறைக்கவும், எளிமைப்படுத்தவும், நிலையான வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளும் பணியை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. புதுப்பித்தலைக் கைவிடுதல், ஆன்லைன் கட்டணத்துடன் தானாகவே புதுப்பித்தல், புதுப்பித்தலின் கால அளவை அதிகரித்தல், ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுவதை குறைத்தல், கூட்டாய்வு, பதிவேடுகள் மற்றும் காட்சித் தேவைகள் நீக்குதல் செயல்முறைகள் டிஜிட்டல் மயமாக்கப்படுதல் போன்றவை இச்சீர்திருத்தங்களில் அடங்கும். வணிகம் புரிபவர்களின் காலநேரம், செலவினங்கள் மற்றும் நடைமுறைச் சுமைக் குறைப்பு, அரசுடனான நேர்முகத் தொடர்புகளை அகற்றி, அவர்களது முக்கிய வணிக நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை உறுதி செய்யும் வகையில், இந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

மேலும், வழிகாட்டி நிறுவனம், பல்வேறு துறைகளுடன் இணைந்து, விதிகள் மற்றும் சட்டங்களை எளிமைப்படுத்திடவும், தற்காலத்திற்கு பொருத்தமற்ற சட்டங்களை மறு ஆய்வு செய்திடும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

### 1.4.3 ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0 துவக்கம்

வணிகம் புரிதலுக்கான அனுமதிகளை உரிய காலகட்டத்தில் ஒற்றைச் சாளர இணையதளத்தின் மூலம் வழங்குவதற்காக, வணிகம் புரிதலை எளிதாக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தில் 160 அனுமதிகளுக்கான கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சேவைகள் அனைத்தையும் டிஜிட்டல் மயமாக்கி, அவற்றின் கால வரையறைக்குள் மேற்கொள்ளப்படும் வகையில், ஒற்றைச் சாளர இணையதளம் 2.0-வை ஜூலை 20, 2021 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் துவக்கி வைத்தார்கள். தற்போது, இந்த இணையதளம் மூலம், 24 துறைகளைச் சார்ந்த 100 சேவைகள் வழங்கப்படுகிறது. 2022ஆம் வருட

இறுதிக்குள், கூடுதலாக 100 சேவைகள் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள், தங்களது திட்டங்களின் வெவ்வேறு நிலைகளுக்கு உரித்தான பல்வேறு அரசு வணிக சேவைகளுக்கு, தடையற்ற முறையில் விண்ணப்பித்திட, ஒற்றைச்சாளர இணையதளம் 2.0 வெகுவாக உதவுகிறது.

- முதலீட்டாளர்கள் அனுமதிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னரே, காலக்கெடு, நடைமுறை, கட்டணம் மற்றும் அனுமதி தொடர்பான ஆவண சரிபார்ப்பு பட்டியல் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.
- விண்ணப்பங்களின் இணை செயலாக்கம் - பல்வேறு துறைகளின் அனுமதிகளுக்கு, ஒரே சமயத்தில் விண்ணப்பிக்கலாம்.
- சம்பந்தப்பட்ட துறைகள், வரையறுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தேவையான ஒப்புதல் அளித்திடாவிட்டால், சில அனுமதிகளுக்கு கருதப்பட்ட ஒப்புதல்களாக வழங்கிடும் வசதி.
- ஆன்லைன் தகவல் வழிகாட்டி மூலம், முதலீட்டாளர்கள், தங்கள் நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய அனுமதிகளை தெரிந்து கொள்ளலாம்.

- முதலீட்டாளர்களின் சந்தேகங்களுக்குத் தீர்வு காணும் வகையில், செயற்கை நுண்ணறிவு உரையாற்றும் வசதி *(Artificial Intelligence Chatbot)*
- விண்ணப்பத்தின் நிகழ்நேர நிலையை தெரிந்து கொள்ளலாம். குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் விழிப்பூட்டல்கள் *(Alerts)* அளித்திடும் வசதி
- சான்றிதழ்களை, மூன்றாம் தரப்பு சரிபார்ப்புக்கான ஏற்பாடுகள்
- விண்ணப்பங்களில் ஏதேனும் சிக்கல்கள் / பிரச்சனைகள் இருந்தால், வழிகாட்டுதல் நிறுவன பணியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுடன், காணொளி சந்திப்புகள் ஏற்பாடு

ஆகஸ்ட் 2021 வரையில், ஒற்றைச் சாளர இணையதளம் மூலமாக, 305 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 212 விண்ணப்பங்களுக்கு முழுவதுமாக அனுமதிகள் அளிக்கப்பட்டுள்ளது.

### 1.4.4 தொழில் தோழன்

தொழில் தோழன் *(Biz Buddy)* என்பது, முதலீட்டாளர்களுக்கும், மாநில அரசுக்கும் இடையிலான அரசு வணிக சேவைகளை எளிதாக்கிடும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்ட ஒரு தொழில் உதவி இணையதளம்

ஆகும். தொழில் தோழன் இணையத்தின் முக்கிய நோக்கங்கள்:-

- முதலீட்டாளர்களுக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட தீர்வு முறையை உருவாக்கி, விரைவான தீர்வுகளை அளித்தல்
- திட்டங்கள் அமைத்திட்டபின் தேவைப்படும் சேவைகளை சிறப்புற அளிப்பதன் மூலம் மாநில முதலீட்டுச் சூழலை மேம்படுத்துதல்

ஆகஸ்ட் 2021 வரையில், 203 உதவி அழைப்புகள் வரப்பெற்று, அவற்றில் 194 உதவி அழைப்புகளுக்கு தீர்வு அளிக்கப்பட்டுள்ளன. இதன் பொருட்டு, செயலாக்க நேரம் 85 சதவிகித அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

### 1.4.5 மண்டலத் தொடர்பு குழு

மாநிலம் முழுவதிலும் உள்ள முதலீட்டாளர்கள், தொழில் அமைப்புகள் மற்றும் முதலீடு செய்யக்கூடியவர்களுக்கு களத்தில் தேவைப்படும் ஆதரவு சேவைகளை அளித்திடும் வகையில், ஒரு மண்டலத் தொடர்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பல்வேறு அரசுத் துறைகள் மூலமாகவும், தொழில் தோழன்

இணையதளம் மூலமாகவும், சிக்கல்களைத் தீர்த்து வைத்திடும் வகையில் பணிபுரிகிறது.

### 1.4.6 ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

தற்போது உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் புதிய முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளக் கூடிய அனுமதி மற்றும் ஒப்புதல்கள் தொடர்பான எந்தவொரு சிக்கல்களையும் உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு திட்ட மேலாண்மை குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒற்றைச் சாளர இணையதளம் மற்றும் தொழில் தோழன் ஆகிய இணைய தளங்களை இக் குழு நிர்வகிக்கின்றது.

## 1.5 விரைவில் வெளியிடப்பட உள்ள கொள்கைகள்

வழிகாட்டி நிறுவனம், நிதிநுட்பக் கொள்கை, உயிர் அறிவியல்-ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் உற்பத்திக் கொள்கை, ஏற்றுமதி திட்டம், திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கை போன்றவற்றை வடிவமைத்து வருகின்றது. இதன் மூலம், மாநிலத்தில் இந்தத் துறைகளின் வளர்ச்சியை வேகப்படுத்த இயலும்.

## 1.6 வெளிப்புற ஈடுபாடு

சர்வதேச முதலீட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி, தமிழ்நாட்டினை ஒரு உலகளாவிய முதலீட்டு மையமாக நிலைநிறுத்திடும் வகையில், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு வெளிப்புற ஈடுபாட்டுக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதர்கள், முக்கிய தொழில் அமைப்புகள், குறிப்பிட்ட நாடுகளின் தூதரகங்கள் ஆகியவற்றுடன் வழிகாட்டி நிறுவனம், தொடர்ச்சியாக இணைந்து பணியாற்றி வருகின்றது.

டென்மார்க், ஜப்பான் மற்றும் பிரான்சு போன்ற நாடுகளில் முக்கிய நாடுகளுக்காக ஒரு வட்ட மேசை அமைப்பினை உருவாக்கி அந்நாடுகளின் தொழில் நிறுவனங்கள் வர்த்தக அமைப்புகள் மற்றும் துணைத் தூதரகங்கள் ஆகியவற்றுடன் பல சந்திப்புகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டினை முதலீட்டு மையமாக நிலைநிறுத்திடும் வகையில், பிரிக்ஸ் வர்த்தக கண்காட்சி 2021ல், வழிகாட்டி நிறுவனமும், காணொளி மூலம் பங்கேற்றது.

### 1.6.1 சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவன ஏற்பாடுகள்

தமிழ்நாட்டில், முதலீடுகளை ஈர்த்திடவும், உலக அளவில், தமிழ்நாட்டைப் பற்றிய கண்ணோட்டத்தினை மேம்படுத்துவதற்காக பொருத்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், வழிகாட்டி நிறுவனம், பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, அந்தந்த நாட்டின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்து வருகிறது. இத்தகு திறம்வாய்ந்த செயல்பாடுகள் மூலம், அந்த நாடுகளில் இருந்து முதலீடுகளை வழிகாட்டி நிறுவனம் ஈர்க்கின்றது.

ஜப்பானிய முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள ஜப்பானிய நிறுவனங்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளைக் குறித்து விவாதித்து, தீர்வு / தெளிவு அளிக்கும் வகையிலும், ஒரு ஜப்பான் - தமிழ்நாடு செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டு, ஜப்பானிய நிறுவனங்கள் எதிர்கொண்ட பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

- அமெரிக்க நாட்டுக்கான அமைவாக பணி புரிந்திட, அமெரிக்காவில் உள்ள அமெரிக்கத் தமிழ் தொழில் முனைவோர் சங்கத்துடன் *(ATEA)* தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கோண்டுள்ளது.
- அமெரிக்கா – தமிழ்நாடு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திடும் வகையில், *US-India Strategic Partnership Forum* உடன் வழிகாட்டி நிறுவனம், ஒரு நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஜப்பான் நாட்டில் இருந்து முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கனகாவா மற்றும் ஹிரோஷிமா மாகாணங்களுடன், பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரக நாடுகளுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தவும், அந்நாடுகளில் இருந்து, முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்த்திடவும், வணிகத் தலைவர்கள் மன்றம் மற்றும் துபாயைச் சேர்ந்த *ITEC* உடன் ஒரு நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மேலும், ஜெர்மனி மற்றும் கொரிய குடியரசு ஆகிய நாடுகளுடனும், ஆலோசனை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.7 *2021-2022*ம் நிதியாண்டில் செயல் திட்டம்

**வளர்ந்து வரும் துறைகளில் அதிக கவனம் செலுத்துதல்**

- உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தற்போதுள்ள உயர்மதிப்புக் கூட்டல் பிரிவுகளை ஊக்குவித்து, வளர்ந்து வரும் துறைகளிலிருந்தும் முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்தி, அதன் மூலம் வருங்காலத்தில் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.
- முக்கிய நாடுகளின் முதலீடுகள் மீது கவனம் செலுத்தி, *(Focus countries)* வளர்ந்து வரும் துறைகளை ஒருங்கிணைத்து, முதலீட்டு ஆலோசனைகள் மேற்கொள்ளுதல்.

**மிகப் பெரிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்திட கவனம் செலுத்துதல்**

- பல்வேறு துறைகளில், மிகப் பெரிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம், மேல்நிலை மற்றும் கீழ்நிலை தொழில்களின் இணைப்புக்களை வளர்ச்சி பெற்றிட வைத்தல்.

**சர்வதேச தொடர்பு**

- சர்வதேச அளவில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்று, முதலீடுகளை ஈர்த்திடும் வகையில்

தொழில் துறையும் வழிகாட்டி நிறுவனமும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**விநியோகச் சங்கிலியை பலப்படுத்துதல்**

- தற்போது மாநிலத்தில் உள்ள விநியோகச் சூழல் அமைப்பினை வலுப்படுத்துவன் மூலம், கீழ்நிலை நிறுவனங்களுக்கான செலவினங்களைக் குறைத்து, முதலீடுகளை ஈர்க்க ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்குவது.
- முதலீட்டு மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று, தமிழ்நாட்டின் முதலீட்டுத் திறன்களை வெளிப்படுத்தி, மாநிலத்தில் முதலீட்டு வளர்ச்சியினைப் பெருக்கிடுதல்.

**தொழில் சூழல் அமைப்பு வளர்ச்சி**

- வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் மற்றும் வளர்ச்சி பெற்ற தொழில்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் வகையில் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தல்.
- உலகப் பொருளாதார மன்றத்தின் மேம்பட்ட உற்பத்தி மையத் தளத்தினைப் பயன்படுத்தி, *Industry 4.0* தொழில் நுட்பங்களை அடையாளம் கண்டு, அவற்றினை உட்புகுத்தி, தொழில் சூழல் அமைப்புகளை மேம்படுத்துதல்.

- டிஜிட்டல் ஆக்ஸிலரேட்டர் திட்டத்தினை ஊக்குவிப்பதன் மூலம், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள புத்தொழில் திட்டங்களுக்கு மானியம் அளித்தல்.
- வளர்ந்து வரும் துறைகளில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்களுடன் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளை ஒருங்கிணைத்து மிக உயரிய தொழில் நுட்ப வேலைகளுக்கு தேவைப்படும் மனித வளத்தை தயார் செய்வதற்காக, வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு பிரத்யேக பிரிவு அமைத்தல்.

**வணிகம் புரிதலை எளிதாக்குதல் மற்றும் வணிகம் புரியும் செலவினங்களைக் குறைத்தல்**

- *3* வருட காலகட்டத்திற்கு, அனுமதிகளுக்காகக் காத்திருக்காமல், சுய சான்றிதழ் சமர்ப்பித்து விட்டு, தொழிற்சாலைகளை இயக்கிக் கொள்ளலாம் என்ற வகையில், தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.
- கூடுதலாக *100* சேவைகளை முதலீட்டாளர்களுக்கு அளிப்பதன் மூலம், ஒற்றைச் சாளர இணையதளத்தின் திறன்களை வெகுவாக மேம்படுத்துதல்.

- முதலீட்டாளர்களுக்கான ஒழுங்குமுறை இணக்கச் சுமையை வெகுவாகக் குறைத்திடும் பொருட்டு, பழமையான சட்டங்கள், விதிகள் மற்றும் இணக்கங்களைத் திரும்பப் பெறுதல், உட்படுத்துதல் அல்லது திருத்துதல்.

**கொள்கை அணுகுமுறைகள்**

- ஐந்து வருட காலத்திற்கான தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சித் திட்டத்தினை வெளியிடுதல்.
- தொழில் கொள்கைகளுக்கான கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் செயல்படுத்தல் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்துதல்.
- அந்நிய நேரடி முதலீட்டில், வணிகம் புரிதலை எளிதாக்குதலின் தாக்கம், தமிழ்நாட்டில் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி, தமிழ்நாட்டில் *Industry 4.0* போன்ற தலைப்புகளில் ஆவணங்கள் வெளியிடுதல்.




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு" மாநாட்டில் முதலீட்டாளர்களுடன்**

*Blank page*



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சாம்சங் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்தனர்

*Blank page*



ஓலா எலக்ட்ரிக் தொழிற்சாலை இணை நிறுவனர் திரு. பவிஷ் அகர்வால் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மரியாதை நிமித்தம் சந்தித்தார்

*Blank page*



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சிங்கப்பூர் துணைத் தூதர்
திரு. போங் காக் டியன் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்தார்

*Blank page*

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாட்டினை தொழில் மயமாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. தொழில் மேம்பாட்டில் சிப்காட் நிறுவனம் ஒரு முன்னோடி நிறுவனமாக விளங்கி 15 மாவட்டங்களில், 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட, 24 தொழிற்பூங்காக்களை, 34,904 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக இந்நிறுவனம் பலதரப்பட்ட தொழிற் சூழலுக்கு ஏற்ப செயல்பட்டு, பல்வேறு சிறந்த நடவடிக்கைகள் மூலம் முதலீட்டாளர்களின் உற்ற நண்பனாக தன்னை நிலைநிறுத்தி வருகிறது.

சிப்காட் நிறுவனத்தின் வளர்ச்சியானது, உலகத்தர தொழில் உட்கட்டமைப்பு மேம்பாடு, திறன் வாய்ந்த பூங்கா ஆளுகை மற்றும் நிருவாக அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நீடித்து நிலைபெறத்தக்க தொழிற் சூழலை ஊக்குவித்தல் ஆகிய மூன்று முதன்மை குறிக்கோள்களை

அடிப்படையாகக் கொண்டுள்ளது. குத்தகை நிலத்தை திரும்பப்பெறும் கொள்கையை நடைமுறைப்படுத்தல், உள்குத்தகைக்கு விடுவதன் மூலம் தொழில் நிலத்தினை முறையாகப் பயன்படுத்துதல், தனியாருடன் பேச்சுவார்த்தை மூலம் நிலத்தைப் பெறுதல், நில ஒதுக்கீட்டாளர்களின் பங்களிப்புடன் கூட்டு ஒப்பந்த முறையில் தொழிற்பூங்காக்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நில ஒதுக்கீடு மற்றும் ஊக்கத் தொகை வழங்குவதற்கான மின்னணுச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதி மற்றும் வளங்களை சிறப்பாக கையாளுதல் போன்ற முன்னோடியான கொள்கைகள் மற்றும் சிறப்பான நடைமுறைகளை சிப்காட் நிறுவனம் தற்போது மேற்கொண்டு வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், ஆயத்த தொழிற்கூடங்கள், வர்த்தக வசதி மையங்கள், மாற்று நீர் வழங்குத் திட்டங்கள், புத்தாக்க மையங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு திட்டங்களான தொழில் வீட்டு வசதி மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற சிறப்புச் செயல்பாடுகளை கூடுதலாக மேற்கொண்டு வருகிறது.

## 2.1. தொழிற்பூங்காக்களின் மேம்பாடு

### 2.1.1 தற்போதைய சிப்காட் தொழிற்பூங்காக்கள்

சிப்காட் நிறுவனமானது, தமிழ்நாட்டில் தொழில்மயமாக்குதலில் முன்னோடி நிறுவனமாக இதுவரை 24 தொழிற்பூங்காக்கள், 6 சிறப்பு பொருளாதார மண்டலங்களை சுமார் 34,904 ஏக்கர் பரப்பளவில் 15 மாவட்டங்களில் உருவாக்கி பராமரித்து வருகிறது. 2,808 தொழில் நிறுவனங்களுக்கு, 22,761 ஏக்கர் நிலங்களை ஒதுக்கீடு செய்து, ரூபாய் 1,29,161 கோடி முதலீடுகளை ஈர்த்ததுடன், 6.90 இலட்சம் நபர்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போது, சிப்காட் நிறுவனம் 5,165 ஏக்கர் நிலப்பரப்பினை நில ஒதுக்கீடு செய்வதற்காக கைவசம் வைத்துள்ளது. சிப்காட் தொழிற்பூங்காக்களின் விவரங்கள், கீழே தரப்பட்டுள்ளன:-

| வரிசை எண் | தொழிற்பூங்கா | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | 1,421 |
| 2 | ஓசூர் | 2,093 |
| 3 | புதுக்கோட்டை | 421 |
| 4 | மானாமதுரை | 492 |
| 5 | கும்மிடிப்பூண்டி | 1,490 |

| வரிசை எண் | தொழிற்பூங்கா | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 6 | தூத்துக்குடி | 2,309 |
| 7 | கடலூர் | 2,671 |
| 8 | இருங்காட்டுக்கோட்டை | 1,844 |
| 9 | பிள்ளைப்பாக்கம் | 1,046 |
| 10 | திருப்பெரும்புதூர் | 2,377 |
| 11 | சிறுசேரி | 783 |
| 12 | நிலக்கோட்டை | 381 |
| 13 | பர்கூர் | 1,390 |
| 14 | பெருந்துறை | 2,706 |
| 15 | கங்கைக்கொண்டான் | 2,014 |
| 16 | ஓரகடம் | 3,490 |
| 17 | செய்யாறு | 2,426 |
| 18 | மப்பேடு | 122 |
| 19 | தேர்வாய்கண்டிகை | 1,127 |
| 20 (அ) | வல்லம்-வடகால் | 1,472 |
| 20 (ஆ) | வானூர்திப் பூங்கா-வல்லம் வடகால் | 242 |
| 21 | குருபரப்பள்ளி | 124 |
| 22 | மணப்பாறை | 1,077 |
| 23 | திண்டிவனம் | 694 |
| 24 | மாநல்லூர் | 692 |
| | **மொத்தம்** | **34,904** |

### 2.1.2 புதிய நிலவங்கி உருவாக்கம்

தமிழ்நாட்டில் அடுத்த ஐந்தாண்டுகளில், 45,000 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்காக நில வங்கிகள் உருவாக்கப்படும். தயார் நிலையிலுள்ள தொழில் நிலங்களை கையிருப்பில் வைத்திருப்பதன் மூலம் புதிய முதலீட்டாளர்களை ஈர்த்து, தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக தக்க வைக்க முடியும். தொழில்துறையில் பின் தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, புதிய நில வங்கிகள் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும்.

### (அ) வரவிருக்கும் தொழிற்பூங்காக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட 24 தொழிற்பூங்காக்களைத் தவிர, சிப்காட் நிறுவனம் கீழ்க்காணும் 8 தொழிற்பூங்காக்களை, 5,603 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கி வருகிறது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

| வரிசை எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | குமாரலிங்கபுரம் | விருதுநகர் | 1,500 |
| 2 | மணக்குடி | இராமநாதபுரம் | 225 |
| 3 | சக்கரக்கோட்டை | இராமநாதபுரம் | 313 |
| 4 | மாநல்லூர் - நிலை II | திருவள்ளூர் | 1,336 |

| வரிசை எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 5 | நெமிலி | காஞ்சிபுரம் | 229 |
| 6 | மாம்பாக்கம் | காஞ்சிபுரம் | 185 |
| 7 | திருமுடிவாக்கம் | காஞ்சிபுரம் | 82 |
| 8 | அதகபாடி | தருமபுரி | 1,733 |
| | | **மொத்தம்** | **5,603** |

## (ஆ) திட்டமிடப்பட்டுள்ள புதிய தொழிற்பூங்காக்கள்

மேலும், கீழ்க்கண்ட 18 புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்கிட சிப்காட் நிறுவனத்தால் நிலம் கண்டறிவது / கையகப்படுத்துவது போன்ற முதற்கட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன :-

| வரிசை எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | சிலாநத்தம் | தூத்துக்குடி | 407 |
| 2 | அல்லிக்குளம் | தூத்துக்குடி | 2,234 |
| 3 | கங்கைக்கொண்டான் -நிலை II | திருநெல்வேலி | 1665 |
| 4 | வேலாயுதபுரம் | தூத்துக்குடி | 355 |
| 5 | மேல்மா | திருவண்ணாமலை | 3,174 |
| 6 | பனப்பாக்கம் | ராணிப்பேட்டை | 1208 |
| 7 | சூளகிரி | கிருஷ்ணகிரி | 2924 |
| 8 | குருபரப்பள்ளி நிலை II | கிருஷ்ணகிரி | 105 |

| | | | |
|---|---|---|---|
| 9 | செங்காத்தாக்குளம் | திருவள்ளூர் | 576 |
| 10 | வல்லப்பாக்கம் | காஞ்சிபுரம் | 118 |
| 11 | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் | 468 |
| 12 | இலுப்பைக்குடி | சிவகங்கை | 794 |
| 13 | பூமாலைக்குண்டு | தேனி | 468 |
| 14 | வண்டுவாஞ்சேரி | நாகப்பட்டினம் | 250 |
| 15 | விருதுநகர் | விருதுநகர் | நிலம் கண்டறியப்பட்டு வருகிறது |
| 16 | விழுப்புரம் | விழுப்புரம் | நிலம் கண்டறியப்பட்டு வருகிறது |
| 17 | நாமக்கல் | நாமக்கல் | நிலம் கண்டறியப்பட்டு வருகிறது |
| 18 | தருமபுரி விரிவாக்கம் | தருமபுரி | நிலம் கண்டறியப்பட்டு வருகிறது |

நிலவங்கி உருவாக்கும் பணியை துரிதப்படுத்த, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம் எளிமையாக்கப்படவுள்ளது. மாற்றுவகை நில எடுப்பு முறைகளான தனியார் பேச்சுவார்த்தை மற்றும் நிலச்சேர்க்கை *(land pooling)* ஆகிய முறைகளும் பின்பற்றப்படும்.

## 2.2 துறை சார்ந்த பூங்காக்கள்

சிப்காட் நிறுவனத்தால் நிறுவப்படவுள்ள துறை சார்ந்த பூங்காக்களின் விவரங்கள் பின்வருமாறு:-

### 2.2.1 பன்னாட்டு அறைகலன் பூங்கா

நாட்டிலேயே முதன் முறையாக பன்னாட்டு அறைகலன் பூங்கா ஒன்று தூத்துக்குடி சிப்காட் தொழிற்பூங்காவில், 1,100 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும். அதிக அளவிலான அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், ஏற்றுமதி சார்ந்த அறைகலன் உற்பத்தி தொழில்களை ஏற்படுத்தும் வகையிலும் இப்பூங்கா உருவாகும். முதற்கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உள்ள இப்பூங்கா திட்ட பணிகள் முடிவடைந்து, டிசம்பர் 2021-ல் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.2 மருத்துவ உபகரண தொழிற்பூங்கா *(Medical Devices Park)*

மருத்துவ உபகரணங்கள் மற்றும் அது சார்ந்த தொழில்நுட்பம், வளர்ச்சியடையக்கூடிய துறையாக கண்டறியப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சூழலுடன் இத்துறையை மேம்படுத்தும் பொருட்டு, மருத்துவ உபகரணத்

தொழிற்பூங்கா ஒன்று சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில் 150 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.

### 2.2.3 தோல் பொருள் தொழிற்பூங்கா

தோல் பொருள் தொழில், மாநிலத்தின் பாரம்பரியத் தொழில்களில் ஒன்றாகவும், அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் தொழிலாகவும் விளங்குகிறது. இராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில், தோல் பொருட்கள் உற்பத்திக்காக தோல் பொருள் பூங்கா ஒன்று, மத்திய அரசின் பெரும் தோல் காலணி மற்றும் உபகரணங்கள் தொகுப்பு *(Mega Leather Footwear Accessories Cluster)* திட்டத்தின் கீழ் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும்.

### 2.2.4 உணவுப் பூங்கா

மாநிலத்தின் உணவு பதப்படுத்தும் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில், சிப்காட் நிறுவனம் முதற்கட்டமாக, மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய 3 இடங்களில் தலா 100 முதல் 150 ஏக்கர் பரப்பளவில் உணவுப்பூங்காக்கள் அமைத்து வருகிறது.

### 2.2.5 மின் வாகனப் பூங்கா

சுற்றுச்சூழல் பாதுகாப்போடு கூடிய எதிர்கால போக்குவரத்து வாகன அமைப்புகளை ஊக்குவிக்க, சிப்காட் நிறுவனம் மாநல்லூர் தொழிற்பூங்காவில், மின் வாகனப் பூங்கா ஒன்றினை 300 ஏக்கர் பரப்பளவில் அமைத்து வருகிறது.

## 2.3 சிறப்பு முன்னெடுப்புகள்

தொழில் நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்வது மட்டுமின்றி, தொழிற்சாலைகள் நீடித்த பாதுகாப்பான சூழலில் இயங்குவதற்கு ஏற்ற வகையில் பல்வேறு கூடுதல் வசதிகள் ஏற்படுத்த சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக சிப்காட் நிறுவனம் கீழ்க்கண்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

### 2.3.1 புவியியல் தகவல் முறைமை வரைபடம் *(GIS Mapping)* மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவல் அமைப்பு *(Geo Data Base)*

தொழில் முனைவோர்கள், சிப்காட் தொழிற்பூங்காக்களின் அமைவிடம் பற்றி அறியவும், இணையவழி மூலம் நில ஒதுக்கீட்டிற்கு விண்ணப்பிக்கவும் ஏதுவாக, அதன் தொழிற்பூங்காக்கள் குறித்து புவியியல்

தகவல் தரவு *(Geo Data Base)* மற்றும் புவியியல் தகவல் முறைமை வரைபடம் *(GIS mapping)* ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது.

### *2.3.2* நீர் மேலாண்மை திட்டம்

#### *(அ)* கடல் நீரை நன்னீராக்கும் ஆலை

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, *60* மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் ஆலை ஒன்றினை, சிறப்பு நோக்க முகமை மூலம் செயல்படுத்த சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

#### *(ஆ)* மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு பரவல் முறையில் *(TTRO)* சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டம்

திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையை பூர்த்தி செய்ய கோயம்பேட்டில், *45* மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட *TTRO* சுத்திகரிப்பு ஆலை, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் *(CMWSSB)* மூலம் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. மேலும், கெலவரப்பள்ளி அணையிலிருந்து ஓசூர் பகுதியில்

அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையை பூர்த்தி செய்ய 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட TTRO சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்க சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

### 2.3.3 தொழிலாளர் குடியிருப்பு வசதி

சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் போக்குவரத்து நேரத்தைக் குறைக்கும் நோக்கில், சிப்காட் வல்லம்-வடகால் தொழிற்பூங்காவில், திருவாளர்கள் பாக்ஸ்கான் (Foxconn) மற்றும் இப்பூங்காவில் அமைந்துள்ள பிற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் தங்குவதற்காக, 18,720 தொழிலாளர்களுக்கான குடியிருப்பு வசதியை (Dormitory) ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், திருப்பெரும்புதூர் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் குடியிருப்பு தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, மற்றுமொரு குடியிருப்பு வசதியை TNIFMC நிறுவனத்துடன் இணைந்து ஒரு சிறப்பு நோக்க முகமை மூலம் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. .

### 2.3.4 வர்த்தக வசதி மையம்

சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 2.16 நிலப்பரப்பில், 50,000 சதுர அடி கட்டுமானத்துடன் வர்த்தக வசதி மையம் ஒன்று மத்திய அரசின் ஏற்றுமதிக்கான வர்த்தக உட்கட்டமைப்பு திட்டத்தின் (TIES) கீழ் வழங்கப்படும் மானியத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது. இது, செப்டம்பர் 2021-ல் துவக்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.5 தொழில் புத்தாக்க மையங்கள்

தொழில் துறையில் புத்தாக்கங்களை ஊக்குவிக்க, ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் தலா 20,000 சதுர அடியில் பரிசோதனை மற்றும் பயிற்சி இயந்திரங்கள், புத்தாக்க நிதி மானியம் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் ஆகியவை உட்பட சுமார் ரூபாய் 53.44 கோடி மதிப்பீட்டில் தொழில் புத்தாக்க மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### 2.3.6 ஆயத்த தொழிற்கூட வசதிகள்

சிப்காட் வல்லம்-வடகால் மற்றும் பெருந்துறை தொழிற் பூங்காக்களில் முறையே 1,50,000 சதுர அடி மற்றும் 50,000 சதுர அடி கொண்ட கட்டுமானத்தில் ஆயத்த

தொழிற்கூட வசதிகள் அமைக்கப்படவுள்ளன. கனரக பளுதூக்கிகள், கனரக இயந்திரங்களை நகர்த்தும் வசதி, எடை மேடை மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளுடன் இத்தொழிற்கூடங்கள் அமைக்கப்படும்.

### *2.3.7* தொழிற்பூங்காக்களை பசுமை மயமாக்குதல்

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், பசுமைச் சூழலை பேணவும் சிப்காட் நிறுவனத்தால், இதுவரை *2,64,277* வளர்ந்த மரக்கன்றுகள் சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள திறந்த வெளி பொது ஒதுக்கீட்டு பகுதியில் நடப்பட்டுள்ளன. மேலும், *3,04,627* மரக்கன்றுகள் *15* சிப்காட் தொழிற்பூங்காக்களில் நடப்பாண்டில் நடப்படும். இதே முறையில், குறிப்பிட்ட சில திறந்தவெளி பொது ஒதுக்கீட்டு பகுதிகள், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பராமரிக்கப்படும்.

### *2.3.8* பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பு

சிப்காட் தொழிற்பூங்காக்களின் பாதுகாப்பினை கருத்தில்கொண்டு, முக்கிய பகுதிகளில் கண்காணிப்புப் கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. இக்கண்காணிப்புக் கேமராக்கள், அந்தந்த திட்ட அலுவலகம் மற்றும் சிப்காட்

தலைமை அலுவலகத்துடனும் இணைக்கப்பட்டு *24/7* கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**2.4 பின்தங்கிய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியை பெருக்குவதற்கு ஊக்கத்தொகை அளித்தல்**

தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கை *2021*-ன் நெறிமுறைகளின்படி ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு மாவட்டங்களிலுள்ள சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு பின்னோக்கிய *(Back ended)* ஊக்கத்தொகையாக நில ஒதுக்கீட்டு மதிப்பில் *10* சதவிதமும், ‘இ’ பிரிவு மாவட்டங்களில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு முன்னோக்கிய *(Front ended)* ஊக்கத்தொகையாக நில ஒதுக்கீட்டு மதிப்பில் *50* சதவிதம் குறைத்து, சிப்காட் நிறுவனம் நிலம் ஒதுக்கீடு செய்து வருகிறது.

**2.5 தொழிலக சூழல் அமைப்பு நிதி *(IEF)***

அரசாணை எண்.*157*, தொழில் (எம்.ஐ.ஜி.*1*) துறை, நாள் *26.7.2021*-ன்படி, சிறு உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் இணக்கமான தொழில் சூழலை உருவாக்கவும், *(Eco System Creation)* சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்களின்

பங்களிப்புக்கு இணையான தமிழ்நாடு அரசின் மானியத்துடன் ரூபாய் 500 கோடி நிதிய மூலதனத்துடன் (Corpus fund) தொழில் சூழல் அமைப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வெளி நிறுவனங்களின் பங்களிப்புடன் மேலும் உயர்த்தப்படும். இந்த நிதி அமைப்புக்கு அரசு முதற்கட்டமாக ரூபாய் 95.84 கோடி வழங்க முடிவெடுத்துள்ளது. சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்கள் அவற்றின் பங்களிப்பாக தலா ரூபாய் 50 கோடி வழங்கும்.

### 2.6 கோவிட்-19 பெருந்தொற்றிற்கு அவசர கால உதவி

தமிழ்நாடு அரசின் உத்தரவிற்கிணங்க, கோவிட் பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சிப்காட் நிறுவனம், சிங்கப்பூர் மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளிடமிருந்து ஆக்சிஜன் உருளைகள் (Oxygen Cylinders), முறைப்படுத்தும் கருவிகள் (Regulators), ஓட்ட அளவு கருவிகள் (Flow Meters), ஆக்சிஜன் செறிவூட்டிகள் (Oxygen Concentrators) மற்றும் நாடித்துடிப்பு அறியும் கருவிகள்(Pulse Oximeter) இறக்குமதி செய்ய துணைபுரிந்தது. ரூபாய் 4.16 கோடி மதிப்பிலான, ஈரப்பதமூட்டியுடன் கூடிய ஓட்டக்கருவிகள் (Flow Meter

*with Humidifiers),* முறைப்படுத்தும் கருவிகள் *(Regulators),* செப்பு குழாய்கள் *(Copper Pipes),* வெளியேற்றும் குழாய்கள் *(Outlets)* மற்றும் பலவாயில் குழாய்கள் *(Manifolds)* போன்ற ஆக்சிஜன் உருளைக்கு தொடர்புடைய கருவிகளை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, மருத்துவமனைகளில் ஆக்சிஜன் இல்லா *1000* படுக்கைகளை ஆக்சிஜன் படுக்கைகளாக மாற்றுவதற்கு வழங்கியுள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனம், *3,000* காலி ஆக்சிஜன் உருளைகளை தருவித்து, தொழில் நிறுவனங்களிடமிருந்து ஆக்சிஜன் நிரப்பி, அவற்றை பல்வேறு மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்ப துணை புரிந்துள்ளது.

மேலும், அரசாணை எண் *154,* தொழில் *(எம்.ஐ.பி.1)* துறை, நாள் *12.5.2021*-ன்படி, சிப்காட் நிறுவனம் ஆக்சிஜன் தயாரிக்கும் ஆலை அமைக்க முன்வரும் நிறுவனங்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்து வருகிறது.

## *2.7* தொழிலக நகரியம் *(Industrial Township)*

சிப்காட் நிறுவனம், இனி தான் உருவாக்கும் தொழிற் பூங்காக்களை தன்னாட்சி அதிகாரம் பெற்ற தொழிலக நகரியங்களாக போதிய சமூக மற்றும் தொழில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்க கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது. தமிழ்நாடு அரசால் தொலை நோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு தொழிலக நகரிய பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டம் *29.4.1997*-ல் இயற்றப்பட்டது. சிப்காட் பெருந்துறை மற்றும் நிலக்கோட்டை தொழிற்பூங்காக்கள் இரண்டும், இச்சட்டத்தின் கீழ் தொழிலக நகரியங்களாக அறிவிக்கப்பட்டன. சிப்காட் நிறுவனம், மேற்படி சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் நடைமுறைப்படுத்தி இவ்விரண்டு தொழிற்பூங்காக்களையும் மாதிரி தொழிலக நகரியங்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்கும். இதர பெரிய தொழிற்பூங்காக்களும் இச்சட்டத்தின் கீழ் படிப்படியாக தொழிலக நகரியங்களாக அறிவிக்கப்படும்.

## 2.8 அரசின் புரிந்துணர்வு ஒப்பந்த நிறுவனங்களுக்கான முகவாண்மை நிறுவனம்

பெருந்தொழில், சிறப்பு பெருந்தொழில் மற்றும் உயர்சிறப்பு பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு முறையிலான தொகுப்பு சலுகை வழங்கும் திட்டத்தினை, அரசின் முகவாண்மை நிறுவனமாக இருந்து சிப்காட் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. 30.04.2021 வரையில், 33 தொழில் நிறுவனங்களுக்கு, ரூபாய் 14,658.57 கோடி அளவில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில், 12 தொழில் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட தொகை ரூபாய் 1070.10 கோடி ஆகும்.

## 2.9 நிதிச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம் சிறந்த நிதிச் செயல்பாட்டுடன் இயங்கி வருவதோடு, 2005-2006 ஆம் நிதியாண்டு முதல் அரசுக்கு தொடர்ந்து ஈவுத்தொகையினை செலுத்தி வருகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூபாய் 546.60 கோடி அளவிற்கு வணிகம் புரிந்து, ரூபாய் 289.09 கோடி இலாபம் ஈட்டி, இதுவரை இல்லாத அளவிற்கு 150 விழுக்காடு ஈவுத் தொகையான ரூபாய் 86.87 கோடி அரசுக்கு வழங்கி உள்ளது. மேலும், 2020-21ஆம் நிதியாண்டில், சிப்காட் நிறுவனம் ரூபாய்

*1,199.35* **கோடி அளவிற்கு வணிகம் செய்து அதன்மூலம்,** **ரூபாய்** *467.46* **கோடி இலாபம் ஈட்டுமென தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.**



1996ஆம் ஆண்டு, தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்
சிப்காட் இருங்காட்டுக் கோட்டையில் ஹூண்டாய் கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறார்கள்

*Black page*



30.6.2021 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிப்காட் இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் நிறுவனத்தின் ஒரு கோடியாவது காரை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்

*Blank page*



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கான கொரோனா
தடுப்பூசி முகாமினை 26.5.2021 அன்று டெய்ம்லர் இந்தியா நிறுவனத்தில் தொடங்கி வைத்தார்கள்

*Blank page*



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிப்காட் திருபெரும்புதூரில் அமைந்துள்ள ஐநாக்ஸ் ஏர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தில் ஆக்ஸிஜன் தயாரிப்பு பணியினை பார்வையிட்டார்கள்

*Blank page*



பர்கூர் சிப்காட் தொழிற் பூங்காவில் உருவாக்கப்பட்டு
வரும் ஓலா மின் வாகன உற்பத்தி தொழிற்சாலை

*Blank page*




மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள், சிப்காட் தொழிற் பூங்காங்களில் 3,04,627 மரக்கன்றுகள் நடும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள்

*Blank page*



சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழிற் பூங்காவின் வான்வழி காட்சி

*Blank page*

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழில் மூலதன முதலீட்டை ஈர்க்கவும், தனியார் தொழில் முனைவோர் மற்றும் மத்திய / மாநில அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் பெரிய/நடுத்தர தொழில் திட்டங்களை நிறுவ, 1965ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். மேலும், பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பெரிய தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ டிட்கோ வழிவகை செய்கிறது.

உற்பத்தி துறை, சேவை துறை மற்றும் உட்கட்டமைப்பு துறைகளைச் சார்ந்த 116 கூட்டாண்மை நிறுவனங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. டைட்டன் நிறுவனம், தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, அசென்டாஸ் தகவல் தொழில் நுட்ப பூங்கா, டைடல் பார்க், டைசல் பயோ பார்க், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், தகவல் தொழில்நுட்ப

விரைவுச் சாலை, சென்னை வர்த்தக மையம் மற்றும் இராமானுஜன் தகவல் தொழில்நுட்ப நகரம் போன்றவை டிட்கோவின் நன்கு அறியப்பட்ட சில கூட்டாண்மை நிறுவனங்களாகும்.

## 3.1. தொழில்துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்

### 3.1.1 பாலிமர் தொழில் பூங்கா

டிட்கோ நிறுவனம், சிப்காட் நிறுவனத்துடன் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள வாயலூர் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்களில் 265 ஏக்கர் பரப்பளவில், பாலிமர் தொழில் பூங்கா ஒன்றினை ரூபாய் 216 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. பாலிமர் பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உட்கட்டமைப்பு வசதிகள் உடையதாக இருக்கும் இப்பூங்கா, மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறையின் பிளாஸ்டிக் பூங்கா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்காக இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை ஒப்புதல் அளித்துள்ள ரூபாய்

*40* கோடி மானியத் தொகையில், ரூபாய் *15* கோடியை அளித்துள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள், நிர்வாக கட்டடம் மற்றும் தொழில் நுட்ப உதவி மையம் ஆகியவற்றிற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பூங்கா அக்டோபர் *2021*-ல் செயல்பட தயார் நிலையில் இருக்கும்.

### *3.1.2* ஏரோஹப் *(Aero Hub)*

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், வானூர்தி மின்னணுவியல் உதிரிபாகங்கள் உற்பத்தி வளாகம், பரிசோதனை மற்றும் சான்றிதழ் வசதி, பொது சேமிப்பு கிடங்கு, திறன்மிகு மையம் *(Centre of Excellence)* மற்றும் திறன் மேம்பாட்டு மையம் *(Skill Development Centre)* போன்ற வசதிகளைக் கொண்ட ஏரோ மையம் ஒன்றினை திருப்*b*பரும்புதூரில் உள்ள வானூர்தி தொழில் பூங்காவில் டிட்கோ நிறுவனம் நிறுவி வருகின்றது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டம் *3.5* இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூபாய் *230* கோடி

முதலீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டங்கள் பிப்ரவரி 2023-ல் முடிவடையும்.

### 3.1.3 சென்னை வர்த்தக மையம் விரிவாக்கத் திட்டம்

இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் மற்றும் டிட்கோ நிறுவனத்தின் கூட்டாண்மை நிறுவனமான தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், நந்தம்பாக்கத்தில் சென்னை வர்த்தக மைய விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் மூலம், 44,360 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட கண்காட்சி அரங்கம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், உணவு வளாகம் மற்றும் இதர வசதிகள் கொண்ட 86,415 சதுர மீட்டர் கூடுதல் கட்டடப் பரப்பு, 9.13 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 309 கோடி முதலீட்டில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விரிவாக்க திட்டம் செப்டம்பர், 2022–ல் முடிவடையும்.

### 3.1.4 பட்டாபிராம் தகவல் தொழில் நுட்ப பூங்கா

ஆவடி வட்டம், பட்டாபிராமில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் 5.57 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்காவினை ரூபாய் 235 கோடி

முதலீட்டில் சென்னை டைடல் பார்க் நிறுவனம் அமைத்து வருகின்றது. இத்திட்டத்தின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் பிப்ரவரி 2023-ல் முடிக்கப்படும்.

### 3.1.5 பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா

டிட்கோ நிறுவனம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் சென்னை துறைமுக நிறுவனம் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகாவில் உள்ள மப்பேடு கிராமத்தில் சுமார் 158 ஏக்கர் நிலப் பரப்பில் ரூபாய் 1,200 கோடி மதிப்பீட்டில், பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவை அமைக்க உள்ளனர். இத்திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் மத்திய அரசின் தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் செயல்படுத்தும். சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகம் ஆகிய மூன்று துறைமுகங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனங்களுக்கு தடையற்ற சாலை மற்றும் இரயில் போக்குவரத்து வசதிகளை இத்திட்டம் ஏற்படுத்தும்.

இத்திட்டத்திற்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.6 நிதிநுட்ப நகரம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களை ஈர்த்து, சென்னையை ஒரு முக்கிய உலகளாவிய நிதி சேவை மையமாக மாற்றும் நோக்கில் சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தில் சுமார் 110 ஏக்கர் நிலத்தில் "நிதிநுட்ப நகரம்" முதல் பகுதியை அமைக்கும் நடவடிக்கையை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இத்திட்டம் ரூபாய் 165 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டம், வங்கிகள், வங்கி சாரா நிதி சேவை நிறுவனங்கள், நிதி வணிக செயல்முறை ஒப்பந்த நிறுவனங்கள், நிதி ஒழுங்குமுறை நிறுவனங்கள், நிதி சந்தை செயல்பாட்டு நிறுவனங்கள், பயிற்சி மையங்கள் போன்றவற்றை நிறுவுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியகூறு அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### 3.1.7 மருத்துவ உபகரணங்கள் பூங்கா

டிட்கோ நிறுவனம் மற்றும் மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் இணைந்து செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு மருத்துவ பூங்கா திட்டத்தை ரூபாய் 392 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்தி வருகின்றன. இந்த பூங்கா, மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி மண்டலம், உயிரி தகவல் நுட்ப மண்டலம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மண்டலம் மற்றும் அறிவு சார் மேலாண்மை மையம் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும். இத்திட்டத்தின் முதற்கட்டம் 120 ஏக்கர் நில பரப்பளவில் ரூபாய் 49.70 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும். இந்த உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கான ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்கும் பணி நடைப்பெற்று வருகிறது.

### 3.1.8 DLF இன்ஃபோ பார்க் லிமிடெட், தரமணி

DLF நிறுவனம் டிட்கோவுடன் இணைந்து சென்னை தரமணியில் 7 மில்லியன் சதுர அடி பரப்பளவில் 26.64 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில் நுட்ப பூங்கா ஒன்றினை சுமார் ரூபாய் 5000 கோடி மதிப்பீட்டில் நிறுவி

வருகிறது. முதற்கட்டமாக ரூபாய் 1200 கோடி மதிப்பீட்டில், 2.5 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மார்ச் 2022-ல் நிறைவடையும்.

### 3.1.9 டைடல் நியோ

டிட்கோவின் கூட்டாண்மை நிறுவனமான டைடல் பார்க் நிறுவனம், தமிழ்நாட்டின் இரண்டாம் (Tier-2) மற்றும் மூன்றாம் நிலை (Tier-3) நகரங்களில் சுமார் 50,000 முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவில் மினி டைடல் பூங்காக்களை அமைக்கவுள்ளது. இந்த டைடல் பூங்காக்களை அமைப்பதற்கு தேவையான நிலங்களை அரசு வழங்க உள்ளது. டைடல் நிறுவனத்தால் அமைக்கப்படும் சிறப்பு நோக்கு நிறுவனத்தில் அரசின் பிரதிநிதியாக டிட்கோ நிறுவனம் ஒரு பங்குதாரராக செயல்படும். முதற்கட்டமாக, விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர் மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்களில் மினி டைடல் பூங்காக்களை டைடல் நிறுவனம் அமைக்கும். மேலும், மற்ற நகரங்களிலும் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

### *3.2* **தொழில் பெருவழிகள்** *(Industrial Corridors)*

### *3.2.1* **தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் பெருவழி**

வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைக்கான உலகளாவிய உற்பத்தி மற்றும் சேவை மையங்களில் ஒன்றாக தமிழ்நாட்டை மாற்றும் பொருட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு தொழில் பெருவழித் திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பாதுகாப்புத் தளவாட உற்பத்தி அலகுகள், பரிசோதனை மற்றும் சான்றிதழ் வழங்கும் வசதிகள், ஏற்றுமதி சேவை மையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு தொழில் நிறுவனங்களுக்கான தொழில் தொகுதிகள் *(Cluster)* இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இப்பெருவழித் திட்டத்தில் பல்வேறு வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை அரசு நிறுவனங்களான *BEL*, *OFB* மற்றும் *TVS*, *Data Patterns*, *Crown Corporation*, *L&T*, *Polyhose* மற்றும் *LMW* ஆகிய தனியார் நிறுவனங்கள் ரூபாய் *2000* கோடி வரை முதலீடு செய்துள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்bபரும்புதூரில் சுமார் 250 ஏக்கர் நிலத்தில் வான்வெளி பூங்கா ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சூலூர் அருகில் வரப்பட்டியில் சுமார் 500 ஏக்கர் நிலங்களையும், அன்னூரில் சுமார் 1000 ஏக்கர் நிலங்களையும், பாதுகாப்பு தொழில் பூங்காக்களை அமைப்பதற்கென டிட்கோ கண்டறிந்துள்ளது.

### 3.2.2 சென்னை-பெங்களூரு தொழில் பெருவழி

திருவள்ளூர் மாவட்டம், சென்னை-பெங்களூரு தொழில் பெருவழியில் டிட்கோ மற்றும் தேசிய தொழில் பெருவழி மேம்பாடு மற்றும் செயலாக்க நிதியம் (NICDIT) இணைந்து பொன்னேரி தொழில் முனையத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இம்முனையம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள், சரக்குகள் கையாளுவதற்கான பிரத்தியேக சாலை மற்றும் இரயில் வழித்தடங்கள், சரக்காளுமை மையங்கள், மின்சாரம், பொது உட்கட்டமைப்பு வசதிகளுடனும் கூடிய தொழில் நகரியமாக உருவாக்கப்படும். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில், சுமார் 650 ஏக்கர் நிலமும், சென்னை மாவட்டம்,

மாதவரம் மற்றும் திருவொற்றியூர் வட்டத்தில், சுமார் 530 ஏக்கர் நிலமும் இத்திட்டத்தின் கீழ் தொழில் நகரியங்களாக முதற்கட்டமாக உருவாக்கப்படும். இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கும் பணிகள் ஆலோசகர் நிறுவனம் மூலம் நடைபெற்று வருகின்றன.

### 3.2.3 கொச்சி - கோயம்புத்தூர்-பெங்களூரு தொழில் பெருவழி

சென்னை-பெங்களூரு தொழில் பெருவழித் திட்டமானது கோயம்புத்தூர் வழியாக கொச்சி வரை கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடங்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தர்மபுரியில் சுமார் 1700 ஏக்கர் நிலம், உலகதரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் முனையமாக உருவாக்கப்படும். இம்முனையம், இந்திய அரசு திட்டத்தின் கீழ் ஒரு மெகா ஜவுளி பூங்காவாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முனையத்தின் பெருந்திட்டம் ஆலோசகர் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 3.2.4 சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித் திட்டம்

மாநிலத்தில் துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு கடற்கரை பொருளாதார பெருவழித் திட்டத்தின் ஒரு பகுதியான சென்னை கன்னியாகுமரி பெருவழித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டு வருகின்றது. இப்பெருவழி, மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, நிதி உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது:-

(i) ரூபாய் 6641 கோடி மதிப்பீட்டில் 16 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல் திட்டம்

(ii) ரூபாய் 4526 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் 765 KV துணை மின் நிலையம் மற்றும் ஒட்டப்பிடாரத்தில் 400 KV துணை மின் நிலையம் மற்றும் இணைப்பு மின் பாதைகள் அமைத்தல்

இப்பெருவழித் திட்ட பகுதியில் தொழில் முனையங்களை அமைப்பதற்காக, மதுரை-திண்டுக்கல்-விருதுநகர்-தேனி,தூத்துக்குடி-திருநெல்வேலி,இராமநாதபுரம்,கடலூர்-நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை-சிவகங்கை மற்றும் அரியலூர்-பெரம்பலூர் ஆகிய ஆறு முனையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை-திண்டுக்கல்-விருதுநகர்-தேனி மற்றும் தூத்துக்குடி-திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழில் முனையங்கள் முதல் கட்டமாக செயல்படுத்தப்படும். இம்முதற்கட்ட திட்டத்திற்கான பெருந்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி மூலம் தற்போது செயல்படுத்தபட்டு வரும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கிய பின் இப்பெருவழித் திட்டத்தின் கீழ் ஆசிய வங்கி உதவி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது இப்பெருவழியில் தூத்துக்குடி, விருதுநகர், தேனி, சிவகங்கை, மணப்பாறை, இராமநாதபுரம் மற்றும் கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் தொழில் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் சொந்த நிதியில் அமைத்து வருகிறது.

## 3.3. தொழில் 4.0 மற்றும் உயர் தொழில் நுட்பங்களை மேம்படுத்த முயற்சிகள்

### 3.3.1 வளர் துறை ஊக்க நிதியம் *(Emerging Sector Seed Fund)*

டிட்கோ மற்றும் தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம், *(TNIFMC)* இணைந்து ரூபாய் 500 கோடி தொகுப்பு நிதியை *(Corpus size)* வளர்ந்து வரும் துறைகளுக்கான ஊக்க நிதியாக அமைத்து வருகிறது. இந்த நிதி மூலம், நிதிநுட்பம், மின்சார வாகனங்கள், மருத்துவ சாதனங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, ரோபாட்டிக்ஸ், உயிரி தொழில் நுட்பம், வேளாண்மை தொழில்நுட்பம், மருத்துவ தொழில்நுட்பம், தொழில்நுட்ப ஜவுளி, மின்னணுவியல் மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி போன்ற வளர்ந்து வரும் துறைகளுக்கு முதலீட்டு உதவி செய்யப்படும். இந்த நிதிக்கு டிட்கோ நிறுவனம் ரூபாய் 30 கோடியும், டைடல் பார்க் நிறுவனம் ரூபாய் 20 கோடியும் பங்களிக்கும். மீதமுள்ள தொகுப்பு நிதி ரூபாய் 450 கோடியை தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் வெளி சந்தை மூலம் திரட்டி வழங்கும். இந்நிதியை செயல்படுத்துவதற்காக டிட்கோ மற்றும் *SBI Caps* இடையே

ஒரு ஒப்பந்தம் *(Indenture of Trust)* கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்நிதி *SEBI*-ல் விரைவில் பதிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.3.2 உயர்தர உற்பத்தி தொழில்களுக்கான திறன் மிகு மையங்கள் *(Centers of Excellence)*

தொழில் நிறுவனங்கள், புதிய தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதற்கும், உலகளாவிய போட்டியில் நிலைத்து நிற்பதற்கும் வழிவகை செய்யும் வகையில் உயர்தர உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் தொழில் *4.0* தொழில்நுட்பத் துறையில் திறன்மிகு மையங்களை டிட்கோ அமைத்து வருகின்றது. தனியார் தொழில் நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து குறைந்தபட்சம் *4* திறன் மிகு மையங்களை அமைப்பதற்கு ரூபாய் *100* கோடி வரை முதலீடு செய்ய டிட்கோவிற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. உயர்தர தொழில் நுட்ப உற்பத்தி துறையில் *(additive manufacturing)* ஒரு திறன் மிகு மையம் அமைக்க *GE Aviation* மற்றும் டிட்கோ நிறுவனத்திற்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. தேசிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப

நிறுவனத்துடன் *(National Institute Of Electronics And Information Technology)* இணைந்து வாகன மின்னணுவியல் *(Automotive Electronics)* துறைக்கென ஒரு திறன்மிகு மையத்தினை அமைக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும், *4* நிறுவனங்கள் திறன் மிகு மையங்களை அமைக்க டிட்கோவிடம் கருத்துரு சமர்பித்துள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் தொழில்நுட்ப கல்வித் துறை ஆகியவற்றுடன் இணைந்து தொழில் *4.0* தொழில் நுட்பத் தரத்திற்கு தொழில் பயிற்சி மையம் மற்றும் பாலிடெக்னிக் மாணவர்களின் திறனை மேம்படுத்த டிட்கோ நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

### *3.4* சென்னை புதிய பன்னாட்டு விமான நிலையம்

தமிழ்நாட்டில், அதிகரித்து வரும் விமான போக்குவரத்து உட்கட்டமைப்பை விரிவுபடுத்தும் வகையில் சென்னைக்கு அருகில் புதிய பன்னாட்டு விமான நிலையத்தை அமைப்பதற்கான பணிகளை அரசு

மேற்கொண்டு வருகின்றது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாக டிட்கோ செயல்பட்டு வருகின்றது. அரசு அறிவுறுத்தலின் படி, சிப்காட் நிறுவனத்தின் உதவியுடன் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான இடத்தை தேர்வு செய்யும் பணியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது.

### *3.5* கோவிட் தொடர்பான மருத்துவ சாதனங்கள், மருந்துகள் மற்றும் ஆக்சிஜன் உற்பத்தி வசதிகளை அமைத்தல்

கோவிட் தொடர்பான உயர் தொழில் நுட்ப மருத்துவ சாதனங்கள், ஆக்சிஜன் செறிவூட்டிகள், தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள் போன்றவற்றின் உற்பத்தியை தமிழ்நாட்டில் அதிக அளவில் பெருக்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த உற்பத்தி வசதிகளை கூட்டாண்மை முறையில் அமைப்பதற்கு டிட்கோ விருப்ப கருத்துரு கோரியதின் அடிப்படையில், *45* விண்ணப்பதாரர்கள் தங்களது விருப்ப கருத்துருக்களை சமர்பித்து உள்ளனர். இதில் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களில், ஒருவர் மட்டும் ரூபாய் *140* கோடி திட்ட மதிப்பீட்டில் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள்

தயாரிப்பதற்கான திட்டத்திற்கு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். மேலும், 23 விண்ணப்பதாரர்கள் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியிலும் மற்றும் திட்டத்திற்கு பொருத்தமான இடங்களை தேர்வு செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.


## 3.6 டிட்கோ நிதிச்செயல்பாடு

டிட்கோ நிறுவனம், 2019-20ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 182.57 கோடியை நிகர இலாபமாக ஈட்டி, அரசுக்கு 30% சதவீத ஈவு தொகையாக ரூபாய் 54.77 கோடியை அளித்துள்ளது. 2020-21ஆம் நிதியாண்டில் ரூபாய் 136.32 கோடியை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.



**சென்னை நந்தம்பாக்கத்தில் அமையவுள்ள நிதி நுட்ப நகர வடிவமைப்பு**

*Blank Page*




தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் பெரு வழித் திட்டம்

*Blank page*

### 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளத்தை மேம்படுத்த, இந்திய கம்பெனிகளின் சட்டத்தின் கீழ் 1949ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் முன்னோடி மாநில நிதி நிறுவனமாகும். இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க கடன் வழங்குவதில் இக்கழகம் முன் நிற்கிறது. இக்கழகம் அளித்து வரும் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காடுக்கு மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் மொத்த நிதி உதவியில் 40 விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனம் 31.03.2021 வரை 1,27,227 நிறுவனங்களுக்கு ரூபாய் 19,441.93 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும் வழிக்காட்டுதலாலும், இக்கழகம்

*2003-04*ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த *18* வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. *2020-21* ஆம் நிதியாண்டில், ரூபாய் *32* கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## *4.1* கடன் தொகுப்பு


இந்நிறுவனத்தின் கடன் தொகுப்பு *31.03.2021* அன்று உள்ளவாறு ரூபாய் *1,354.68* கோடியாகும். இது குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

துறை வாரியாக





1. பொறியியல் – 26%
2. பிளாஸ்டிக் – 14%
3. உணவு பதனிடுதல் – 11%
4. காகிதம் மற்றும் காகித பொருட்கள் – 10%
5. ஜவுளி – 9%
6. மின் இயந்திரங்கள் – 5%
7. மற்றவை – 25%

**திட்ட வாரியாக**




1. பொது காலக் கடன் திட்டம் – 51%
2. இயந்திர நிதியுதவி திட்டம் – 13%
3. நீட்ஸ் திட்டம் – 6%
4. நடை முறை மூலதன திட்டம் – 3%
5. பெரு நிறுவனங்களுக்கான சிறப்புத்திட்டம் – 7%
6. பட்டி நிதியுதவி திட்டம் – 6%
7. மற்றவை – 14%

**தொழில் நிறுவன வாரியாக**




1. குறு நிறுவனங்கள் – 13%
2. சிறு நிறுவனங்கள் – 58%
3. நடுத்தர நிறுவனங்கள் – 12%
4. பெரு நிறுவனங்கள் – 17%

## 4.2 கோவிட்-19 சிறப்பு நிவாரண நடவடிக்கைகள்

### 4.2.1 கோரஸ் திட்டம் (CORUS)

சர்வதேச தொற்று நோயான கோவிட் எனும் கொரோனாவினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (CORUS) எனும் புதிய திட்டத்தை 01.04.2020 அன்று அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது தனது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன வாடிக்கையாளர்களுக்கு, 6 சதவீத மானியத்துடன், ரூபாய் 25 இலட்சம் வரையிலான கடனுதவியை எவ்வித கூடுதல் பிணைச் சொத்து மற்றும் செயலாக்கக் கட்டணம் இன்றி வழங்கி வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 1828 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூபாய் 218.43 கோடி அளவிலான நிதி உதவியானது, இக்கழகத்தால் 31.03.2021 வரை வழங்கப்பட்டுள்ளது.

### *4.2.2* **கோரஸ் ப்ளஸ் திட்டம்** *(CORUS Plus)*

இக்கழகத்திடமிருந்து கடன் பெறாத குறு, சிறு மற்றும் நடுத்தர நிதி நிறுவனங்களுக்கு கோவிட் பெருந்தொற்று காலத்தில் அவர்களது அவசர நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, *6* சதவிகித வட்டி மானியத்துடன் அதிகபட்சமாக ரூபாய் *50* இலட்சம் வரை இத்திட்டத்தின் கீழ் கடனுதவியாக *18.06.2020* முதல் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், *31.03.2021* வரை *32* நிறுவனங்களுக்கு ரூபாய் *11.71* கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### *4.2.3* **கடன் திருப்பி செலுத்தும் கால அவகாசத்தினை நீட்டித்தல்**

கோவிட் *19* பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் இன்னல்களை களையும் பொருட்டு, ரிசர்வ் வங்கியின் *(RBI)* நெறிமுறைகளின்படி *1.3.2020* முதல் *31.8.2020* வரையிலான ஆறு மாதத்திற்கான அசல் தொகையினை செலுத்துவதற்கான கால அவகாசம், மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆறு மாத காலத்தில் செலுத்த வேண்டிய வட்டியினை, *30.09.2020* முதல் ஏழு மாத தவணைகளில் செலுத்த

அனுமதிக்கப்பட்டுள்ளது. தகுதியுடைய 2223 வாடிக்கையாளர்களில், 1752 வாடிக்கையாளர்கள் இச்சலுகையினை பெற்று பயனடைந்துள்ளார்கள். இதர 471 வாடிக்கையாளர்கள் இச்சலுகையினை பயன்படுத்தாமல் தவணையை திரும்பிச் செலுத்தி வருகின்றனர்.

### 4.2.4 வட்டி மானியத்தை 31.03.2021 வரை முன் கூட்டியே வழங்குதல்

கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவன சூழலைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு 18.08.2020 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.173 மூலம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் 6 சதவிகித வட்டி மானியத்தை 31.03.2021 வரை முன் கூட்டியே வழங்கிட உத்திரவிட்டுள்ளது.

## 4.3 புதிய நிதி திட்டங்கள்

இக்கழகம் வாடிக்கையாளர்களின் பலதரப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் கீழ்க்கண்ட திட்டங்களை இந்நிதியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது:-

### *4.3.1* **நிதி நுட்ப நிறுவனங்களுக்கான திட்டம்** *(Scheme for Fintech Companies)*

புதிய தொழில்நுட்பத்தை பயன்டுத்தி தமிழ்நாட்டிலுள்ள தொழில்முனைவோரின் கடன் தேவைகளை பூர்த்தி செய்கின்ற நிதிநுட்ப நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூபாய் *10* கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.

### *4.3.2* **குறு நிதி நிறுவனங்களுக்கான திட்டம்** *(Micro Finance Institutions)*

இக்கழகத்தால் கடன் வழங்கிடமுடியாத, இக்கழகத்தின் கடன் வரம்புகளுக்கு உட்படாத தொழில் முனைவோருக்கு உதவிடும் பொருட்டு, அத்தகைய தொழில் முனைவோருக்கு கடன் வழங்கிடும் குறு நிதி நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூபாய் *10* கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.

## 4.4 நடைமுறையில் உள்ள திட்டங்கள்

தொழில் முனைவோரின் பல்வேறு நிதி தேவைகளை பூர்த்தி செய்ய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:-

### 4.4.1 பொது காலக்கடன் *(General Term Loan)*

இக்கழகம், உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும், உற்பத்தியைப் பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 30 கோடி வரையிலும், கூட்டு நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 20 கோடி வரையிலும் மற்றும் தனி உரிம நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 15 கோடி வரையிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2020-21 ஆம் ஆண்டில், 227 தொழில் முனைவோருக்கு ரூபாய் 336.02 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *4.4.2* புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் *(New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)*

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு *(NEEDS)* திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு, தொழில் திட்ட மதிப்பீட்டில் *25* சதவீதம் அதிகபட்சமாக ரூபாய் *50* இலட்சம் மூலதன மானியமாக மாநில அரசு வழங்கும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் வட்டியில் *6* சதவீதம் சலுகையும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு சிறப்பு பிரிவினருக்கு, அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு *5* சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு *10* சதவீதமாகவும் இருப்பது, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ், அறிமுகப்படுத்திய முதல் *31.03.2021* வரை *803* முதல் தலைமுறை தொழில்

முனைவோருக்கு ரூபாய் 418.43 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில், 115 தொழில் முனைவோருக்கு ரூபாய் 78.96 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.4.3 உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் தொழில் நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம் *(Working Capital Term Loan for Manufacturing and Processing units)*

இத்திட்டத்தின் கீழ் நவீன அரிசி ஆலைகள் உட்பட, உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்கள், நடைமுறை மூலதனத் தேவைகளுக்கான நடைமுறைக் காலக் கடன் பெறலாம். இத்திட்டம் தொழில் நிறுவனங்களிடமிருந்து நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிறுவனம் ஒன்றிற்கு, அதிகபட்சமாக ரூபாய் 2 கோடி வரை கடனுதவி அளிக்கப்படுகிறது. கூலி அடிப்படையிலான வேலை *(job work)* செய்து தரும் நிறுவனங்களுக்கும் இது போன்ற நடைமுறை மூலதனத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ரூபாய் 50 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

### *4.4.4* எளிய நடைமுறை மூலதனத் திட்டம் *(Flexi Working Capital Term Loan)*

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் நடைமுறை மூலதனத் தேவைகளை / கூடுதல் நடைமுறை மூலதனத் தேவைகளை, இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் பூர்த்தி செய்யும். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூபாய் *2* கோடி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், *2020-21*ஆம் ஆண்டில், *23* தொழில் முனைவோருக்கு ரூபாய் *16.58* கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *4.4.5* காற்றாலைத் / சூரிய மின்சக்தி திட்டம் *(Wind / Solar Power Project)*

தொழில் முனைவோர், காற்றாலை / சூரிய சக்தி திட்டங்களை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து, அதனை தங்களது தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் விற்பனை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டத்தில் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் நிலமதிப்பிற்கும், காற்றாலை / சூரிய சக்தி

சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது.

### 4.4.6 இயந்திர நிதியுதவித் திட்டம் *(Equipment Finance Scheme)*

நடைமுறையில் திறம்பட செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டினை தொழில் முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 50 நிறுவனங்களுக்கு ரூபாய் 61.84 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.4.7 போக்குவரத்து வாகனக்கடன் *(Transport Operators Scheme)*

15 சதவீதம் தொழில் முனைவோரின் பங்களிப்பில், பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித்தட உரிமம் உள்ள பயணிகள் வாகனங்களை வாங்க கடனுதவி வழங்கப்படுகிறது.

### *4.4.8* மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் *(Generator Loan Scheme)*

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தொழில் முனைவோரின் பங்களிப்பு *10* சதவீதம் ஆகும். மின்னாக்கி கடன்களைத் தொழில் முனைவோர் மேலும் எளிதாக பெறுவதற்கேற்ப, பிணையச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

### *4.4.9* சிறப்பு வாடிக்கையாளர் திட்டம் *(Privileged Customer Scheme)*

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் நிதியுதவி பெற்று நடைமுறையில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. தொழில் முனைவோரின் பங்களிப்பு ஏதுமின்றி இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் *2020-21* ஆம் நிதியாண்டில் *31* நிறுவனங்களுக்கு ரூபாய் *10.51* கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *4.4.10* **துரித இயந்திர நிதியுதவி திட்டம்** *(Fast Track Equipment Finance Scheme)*

நடைமுறையில் நன்கு செயல்படும் நிறுவனங்களுக்கு, விரிவாக்கம் / பன்முகப்படுத்துதல் / நவீனமயமாக்குதல் / பழைய இயந்திரங்களை மாற்றுதல் போன்ற காரணங்களுக்காக, தளவாடங்கள் / இயந்திரங்கள் வாங்க இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர், திட்ட முதலீட்டில் *10%* மட்டுமே தங்கள் பங்காக அளிக்க வேண்டும். மேலும், இத்திட்டத்தில் வைப்புநிதி பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் *2020-21* ஆம் நிதியாண்டில் *110* நிறுவனங்களுக்கு ரூபாய் *62.48* கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *4.4.11* **துளிர் திட்டம்** *(Thulir Scheme)*

மாநிலத்தில் உள்ள புதிய தொழில் முனைவோருக்கு உதவும் பொருட்டு தொழில்நுட்ப தகுதி மற்றும் அனுபவம் உள்ள புதுமையான திட்டத்துடன் அணுகும் தொழில் முனைவோருக்கு, குறு மற்றும் சிறு நிறுவனம் மற்றும் சேவை நிறுவனங்கள் துவங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தின் குறைந்த மற்றும்

அதிகபட்ச வரம்பு முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூபாய் 3 கோடி ஆகும்.

### 4.4.12 மருத்துவர்கள் திட்டம் *(Medical Practitioners Scheme)*

தகுதியுள்ள மருத்துவ பயிற்சியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு, வைப்புநிதியை பிணையமாக வைத்து விரைவில் நிதி வழங்கிட வேண்டி, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே ரூபாய் 10 இலட்சம் மற்றும் ரூபாய் 1 கோடி ஆகும்.

### 4.4.13 பட்டி நிதியுதவித் திட்டம் *(Bill Financing Scheme)*

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக நிறுவனம் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி நிதியுதவியினை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் ஒப்பந்ததாரர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ்

நிதியுதவி வழங்கப்படுகிறது. பிணைய சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின் கீழ் இந்த பட்டி நிதியுதவி திட்டத்தில் விரைவில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2020-21ஆம் நிதியாண்டில் 71 ஒப்பந்ததாரர்களுக்கு ரூபாய் 189 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## 4.5. மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அரசு வழங்கும் கீழ்க்காணும் பல்வேறு மானியங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது:

### 4.5.1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானிய திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடன் பெறும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு சலுகை நிதி வழங்கிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசு வழங்கும் வட்டி மானியத்தை, 3 சதவிகிதத்தில் இருந்து 6 சதவிகிதமாக உயர்த்தி 09.10.2019 நாளிட்ட தொழில் (எம்.ஐ.எப்.2) துறையின் அரசாணை (நிலை) எண்.177 மூலம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் நடைமுறைக்கு வந்த 01.04.2019 முதல் 31.03.2021 வரை ரூபாய் 1182.33 கோடி அளவுக்கு கடன்

அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 31.03.2021 வரை ரூபாய் 17.94 கோடி மானியமாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் அரசு திட்டம் 2021-22 நிதியாண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட தொடக்கம் முதல் 31.03.2021 வரை, ரூபாய் 4166.79 கோடி கடன் இக்கழகத்தால் அனுதிக்கப்பட்டு, ரூபாய் 133.44 கோடி மானியம், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

### 4.5.2 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளிலும், சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது 25 சதவீதம், அதாவது அதிகபட்சமாக ரூபாய் 50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும். 2020-21 ஆம் ஆண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital

*Subsidy)* ரூபாய் 34.52 கோடியை 247 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

## 4.6 செயல்பாடு

இக்கழகத்தின் 2020-21ஆம் நிதியாண்டின் செயல்பாடுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| விபரம் | சாதனை<br>2020-21<br>(ரூபாய் கோடியில்) |
|---|---|
| கடன் அனுமதி தொகை | 1303.00 |
| கடன் வழங்கும் தொகை | 849.14 |
| கடன் நிலுவைத் தொகை *(After Write off)* | 1,320.00 |
| மொத்த வாராகடன் (%) | 2.75% |
| இயக்க இலாபம் *(Provl)* | 92.00 |
| நிகர இலாபம் *(Provl)* | 32.00 |

15 ஆண்டு இடைவெளிக்குப்பின் இக்கழகம் 2015-16ஆம் நிதியாண்டில் ஈவுத்தொகை வழங்கியது. அதனைத் தொடர்ந்து 2016-17, 2017-18, 2018-19ஆம் நிதியாண்டுகளிலும் ஈவுத்தொகை வழங்கியது. மேலும்,

2019-20 ஆம் நிதியாண்டின் ஈவுத்தொகையான ரூபாய் 3.03 கோடியினை தமிழ்நாடு அரசிடம் இக்கழகம் வழங்கியது.

**4.7. 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு**

(ரூபாய் கோடியில்)

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக்கூடிய தொகை | கடன் தொகுப்பு |
|---|---|---|---|
| 2021-22 | 1500 | 1215 | 1960 |
| 2022-23 | 1870 | 1450 | 2660 |

## 5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசால் 1979ஆம் ஆண்டு, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. 1985ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் புகளூரில் ஆண்டொன்றுக்கு 90,000 டன் திறனுடன், இந்நிறுவனத்தின், காகித ஆலையின் உற்பத்தி, துவக்கப்பட்டது. ஆலையின் காகித உற்பத்தித் திறன், நான்கு கட்டங்களில் உயர்த்தப்பட்டு, தற்போது ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, பல்வேறு கட்டங்களில் 1180 டன் உற்பத்தி திறனுடையதாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு 2,00,000 டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை, 2016ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில்

இந்நிறுவனம் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு *6,00,000* டன்னாக உயர்த்தப்பட்டதால், தற்போது இந்திய அளவில் இந்நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.

இந்நிறுவனம், பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப உயர்ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை தயாரித்து, விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் *20* சதவீதத்தை, உலகளவில் சுமார் *35* நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம், அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்திய அளவில் முதன்மையாகத் திகழ்கிறது.

காகித தயாரிப்பின் போது உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு *900* டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவியுள்ளது.

தனது மரக்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும், கூழ் மரங்களின் சுய தேவையை பூர்த்தி செய்வதற்காக

இந்நிறுவனம் பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்பு திட்டங்களை துவக்கியுள்ளது. இந்த திட்டங்கள் விவசாயிகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் *2021* ஆம் ஆண்டு, மார்ச் மாதம் *31*ஆம் தேதி வரையில், தமிழ்நாடு முழுவதும், *1,87,680* ஏக்கர் நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தில் *35,964* விவசாயிகள் பங்கு பெற்றுள்ளனர்.

இந்நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, *103.62* மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும், *30* மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், *35.5* மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தில், தமிழ்நாடு அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளது.

**5.1 உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு**

2020-21 ஆம் நிதியாண்டில் முதல் 9 மாதங்களில் கோவிட் பெருந்தொற்று நோயினால், இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும், பல தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டன. இதனால், காகித விற்பனை வெகுவாக பாதிக்கப்பட்டது.

இந்த நெருக்கடியான காலக்கட்டத்திலும், இந்நிறுவனம் 81 சதவீத திறன் பயன்பாட்டுடன் 3,23,588 டன் காகித உற்பத்தியும், 86 சதவீத திறன் பயன்பாட்டுடன் 1,71,711 டன் காகித அட்டை உற்பத்தியும், 104 சதவீத திறன் பயன்பாட்டுடன் 3,08,992 டன் சிமெண்ட் உற்பத்தியும் செய்துள்ளது.

## 5.2 மொத்த விற்று முதல் மற்றும் இலாபம்

2020-21ஆம் ஆண்டின் மொத்த வருவாய் ரூபாய் 2,819.10 கோடியாகும். வரிக்கு முன் நஷ்டம் ரூபாய் 98.69 கோடியாகும். 2020-21ஆம் ஆண்டில் கோவிட் பெருந்தொற்று நோயினால் இந்நிறுவனம் நஷ்டத்தை சந்தித்தது.

## 5.3 ஈவுத்தொகை

2019-20ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக, 60 விழுக்காட்டை, தனது பங்குதாரர்களுக்கு இந்நிறுவனம் வழங்கியுள்ளது. 2019-20ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுக்கு ஈவுத் தொகையாக ரூபாய் 14.66 கோடியினை வழங்கியுள்ளது.

2020-21ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகையாக 30 விழுக்காட்டை இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

## 5.4 ஏற்றுமதி

2020–21 ஆம் ஆண்டில், இந்நிறுவனத்தின் அச்சு மற்றும் எழுது காகித ஏற்றுமதி 70,873 டன்னாகும். காகித அட்டைகள் ஏற்றுமதி 11,415 டன்னாகும்.

## 5.5 வேலை வாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுமார் 2500 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், ஏறத்தாழ 3000

நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

## 5.6 திட்டங்கள்

### 5.6.1 நிறுவனத்தின் இரண்டாம் அலகு - ஆலை விரிவாக்கத் திட்டம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அடுக்கு காகித அட்டை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, ஆலை விரிவாக்க திட்டத்தை ரூபாய் 2,520 கோடி மூலதன முதலீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டமானது, ரூபாய் 1,100 கோடி மூலதன முதலீட்டில், நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின் ஆக்கி பிரிவு ஆகியவற்றை நிறுவும் பணிகளை உள்ளடக்கியது.

முதல் கட்டத்தின் செயலாக்கம் ஆகஸ்ட், 2019-ல் துவக்கப்பட்டது. மார்ச் - ஜூலை 2020 வரையிலும், மீண்டும்

ஏப்ரல் - மே 2021 வரையிலும் கோவிட் பெருந்தொற்று கட்டுப்பாடுகள் இருந்தமையால், இந்த விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்த 5 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டது. இத்திட்டத்தின் உற்பத்தியை துவக்குவதற்கான பணிகள் அக்டோபர் 2021ல் மேற்கொள்ளப்படும். மரக்கூழ் உற்பத்தி டிசம்பர் 2021ல் இருந்து துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூபாய் 1,420 கோடி மூலதன முதலீட்டில், புதிய காகித அட்டை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்ஆக்கியை நிறுவும் பணிகளை உள்ளடக்கிய இந்த விரிவாக்க திட்டத்தின் இரண்டாம் கட்டமானது, முதல் கட்ட விரிவாக்க திட்டம் நிறைவேற்றிய பின்பும், நிதி ஆதாரங்களைப் பெற்ற பின்பும் துவக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு கிடைக்கும்.

### 5.6.2 மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் ஆரம்பப் பள்ளி.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் இரண்டாம் ஆலையின் அருகில் ஓர் ஆரம்பப் பள்ளியை ரூபாய் 3.7 கோடி மூலதன செலவில் நிறுவ திட்டமிட்டது. இந்த ஆரம்ப பள்ளியில் சுமார் 300

மாணவர்களுக்கு எல்.கே.ஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்க 14 வகுப்பறைகள் அமைக்கப்படும். இப்பள்ளியின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 5.7 கூட்டாண்மை சமூக பொறுப்பு

கூட்டாண்மை சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக, சுகாதார முகாம்கள், தொழிற்கல்வி பயிற்சி நிகழ்ச்சிகள், ஆலைக்கு அருகில் உள்ள பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், கல்வி, முதலான சமுதாய நலப் பணிகளை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தவறாமல் செயல்படுத்தி வருகிறது. நிறுவனத்தின் முந்தைய 3 நிதியாண்டுகளின் சராசரி நிகர இலாபத்தில் 2 சதவீத இலாபத் தொகையினை சமுதாய நலப்பணிகளுக்காக செலவழித்து வருகிறது. இந்நிறுவனம் 2021-22ஆம் ஆண்டில் சமுதாய நலப்பணிகளுக்காக ரூபாய் 3.07 கோடி ஒதுக்கி உள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் உள்ள தனது சமுதாயக் கூடத்தை 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை

மையமாக மாற்றியுள்ளது. (152 ஆக்சிஜன் வசதி கொண்ட மற்றும் 48 ஆக்சிஜன் வசதியில்லாத படுக்கைகள்) இந்நிறுவனம், இதற்காக ரூபாய் 75 இலட்சம் செலவழித்துள்ளது. இந்த கொரோனா சிகிச்சை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.05.2021 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், இந்நிறுவனம் ஆக்சிஜன் *Booster compressor* மற்றும் ஆக்சிஜன் நிரப்பு நிலையங்களை ரூபாய் 100 இலட்சம் செலவில் நிறுவி உள்ளது. இதன் மூலம், அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஆக்சிஜனை சிலிண்டர்களில் நிரப்பி வழங்கி வருகிறது.

## 5.8 விருதுகள்

1. இயக்குநர்கள் இன்ஸ்டிட்யூட், புது டில்லி (*Institute of Directors, New Delhi*), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, 2020ஆம் ஆண்டின் சமூகநல நடவடிக்கைளுக்கான, தங்க மயில் தேசிய விருதை ஜுன் 10, 2021ல் நடைபெற்ற காணொளி நிகழ்ச்சியில் வழங்கியுள்ளது.

2. *M/s. Greentech Foundation, New Delhi,* தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சமுதாய நலப்பணிகளில் கல்வியை ஊக்கப்படுத்தியமைக்காக *'Promotion of Education Award, 2020'* என்ற தேசிய விருதை, அக்டோபர் 1, 2020ல், வழங்கியுள்ளது.

3. இந்திய வர்த்தக கூட்டமைப்பு *(Indian Chamber of Commerce, Kolkata),* 2021ஆம் ஆண்டு மாநாட்டில், சிறந்த நீர் மேலாண்மைக்கான *"Water Stewardship Award"* என்ற விருதை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு மார்ச் 2021ல், வழங்கியுள்ளது.

4. சிறந்த மனிதவள நடைமுறைகளை கையாண்டமைக்காக *"HR SCORE 2021"* என்ற விருதை, இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்பு *(Federation of Indian Chambers of Commerce and Industry (FICCI)),* தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு ஏப்ரல் 2021ல் வழங்கியுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் TNPL நிறுவனத்தால் கரூர் மாவட்டம் காகிதபுரத்தில்
அமைக்கப்பட்ட 200 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார்கள்

*Blank Page*

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

உலகின் அதிகம் சிமெண்ட் உற்பத்தி செய்யும் நாடுகளில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சமீப காலங்களில் சிமெண்ட் தொழில் துறை, உயர்தொழில் நுட்பத்தை மேற்கொண்டு வருவதன் காரணமாக மின்சாரத்தை குறைவாக பயன்படுத்துவதிலும், சுற்றுப்புறச் சூழலை பேணுவதிலும் அளப்பரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

தமிழ்நாடு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 40 மில்லியன் டன் உற்பத்தி திறனுடன், இந்தியாவில் அதிக சிமெண்ட் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் மூன்றாவது மாநிலமாக திகழ்கிறது. தற்சமயம், தமிழ்நாட்டில் 19 சிமெண்ட் ஆலைகள் தனியார் துறையின் மூலமும், 4 சிமெண்ட் ஆலைகள் பொதுத்துறை நிறுவனங்கள் மூலமும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ஆம் நாள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும்

சொந்தமான ஒரு துணை நிறுவனமாக துவக்கப்பட்டது. டிட்கோ நிறுவனம் அதனிடம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றியதைத் தொடர்ந்து, 31.12.1994 முதல் டான்செம் அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. டான்செம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் மெ.டன் உற்பத்தி திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 15 இலட்சம் மெ.டன் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு சிமெண்ட் ஆலைகளையும் இயக்கி வருகிறது. டான்செம் நிறுவனத்தின் மொத்த விற்று முதல் *(Turn over)* ஆண்டொன்றிற்கு சுமார் ரூபாய் 423 கோடி ஆகும்.

டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் ஆலைகள் உற்பத்தி துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான அரியலூர் மற்றும் விருதுநகரில் அமைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது டான்செம் 1400 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளையும்

3000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது.

## 6.1 அரசு துறைகளுக்கு PPC விற்பனை

டான்செம் பல்வேறு அரசுத்துறைகளுக்கு குறிப்பாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA)-க்கு அரசின் விலை நிர்ணயக்குழு நிர்ணயித்த விலையில் சிமெண்ட் வழங்கி வருகிறது. பொசலோனா போர்ட்லேண்ட் சிமெண்ட் (PPC) சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்ற காரணத்தால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மற்றும் ஏனைய அரசு பணிகளில் PPC சிமெண்ட்டை உபயோகப்படுத்துவதற்கான அரசாணையை அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி PPC சிமெண்ட்டை அரசு துறைகளுக்கு டான்செம் கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறது:-

| ஆண்டு | PPC சிமெண்ட் (மெட்ரிக் டன்னில்) |
|---|---|
| 2018-19 | 4,06,918 |
| 2019-20 | 3,39,436 |
| 2020-21 | 3,36,575 |
| 2021-22 (31.07.2021 வரை) | 1,08,906 |

## 6.2 சிமெண்ட் விலை நிர்ணயம்

டான்செம் திறந்த வெளிச்சந்தையில் தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களை காட்டிலும் நியாயமான விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இதன் மூலம் சந்தையில் சிமெண்டின் விலையை சீராக்க முடிகிறது. திறந்த வெளிச்சந்தையில் விற்பனையை மேம்படுத்தவும், சந்தையில் தனது பங்களிப்பை அதிகரிக்கவும், டான்செம் கீழ்க்காணும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது:-

- *450* விற்பனை முகவர்கள் மற்றும் *42* ஒப்பந்ததாரர்கள் நியமனம்.
- சிமெண்ட் விற்பனையை அண்டை மாநிலங்களில் அதிகரித்தல்.
- சிமெண்ட் மொத்த அளவு *(Bulk cement)* விற்பனையை கணிசமாக அதிகரித்தல்.
- விற்பனை முகவர்களை ஊக்கப்படுத்துவதற்கு சந்தை நிலவரத்திற்கேற்ற விலை சலுகைகளை மாற்றியமைக்கும் முறையை நடைமுறைப்படுத்துதல்.

## 6.3 சுரங்கப்பணிகள்

டான்செம் சிமெண்ட் ஆலைகளுக்கு தேவையான சுண்ணாம்புக்கல் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஆனந்தவாடி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தின் உற்பத்தியை தற்போதுள்ள அளவான ஆண்டொன்றுக்கு 2.6 இலட்சம் மெ.டன்னிலிருந்து ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் மெ.டன்னாக உயர்த்துவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.
- 1,495 ஹெக்டேர் பரப்பளவுள்ள சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.4 சாதனைகள்

### 6.4.1 அரியலூர் புதிய சிமெண்ட் ஆலை

அரியலூரில் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்று ரூபாய் 809.09 கோடி மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. புதிய ஆலைக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்காக ஒரு புதிய 110 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 01.11.2019 அன்று கிளிங்கர் உற்பத்தி துவக்கப்பட்ட நிலையில் வர்த்தக ரீதியிலான சிமெண்ட் உற்பத்தி 21.03.2020 அன்று துவக்கப்பட்டது. ஒப்பந்ததாரர், திருவாளர்கள் எல்&டி புதிய ஆலையை 01.04.2021 அன்று டான்செம் வசம் ஒப்படைத்தனர். புதிய ஆலையை

நிறுவியதன் மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த சிமெண்ட் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றிற்கு *17* இலட்சம் மெ.டன்னாக உயர்ந்துள்ளது. மே *2021*-ல் புதிய ஆலை முதன்முறையாக *98* சதவிகிதம் கிளிங்கர் உற்பத்தி திறனை எட்டியுள்ளது.

### *6.4.2* நிறுவன சமூக பொறுப்பு *(Enterprise Social Commitment)*

புதிய ஆலை விரிவாக்க திட்டத்திற்கான நிறுவன சமூக பொறுப்பின் ஒரு பகுதியாக, டான்செம் நிறுவனம், இதுவரை ரூபாய் *12.32* கோடி செலவில் அரியலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சமூக மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ளது.

### *6.4.3* *ISO* தர சான்றிதழ்

டான்செம் நிறுவனம், தரத்திற்காக வழங்கப்படும் *ISO: 9001 – 2015* தர சான்றிதழை கூட்டாண்மை அலுவலகத்திற்கு *26.02.2019* அன்றும், அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு *17.07.2019* அன்றும், ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு *25.06.2020* அன்றும் பெற்றுள்ளது. இதன் மூலம் சிமெண்டின் தரம் உறுதி செய்யப்படுவதுடன், திறந்த வெளிச்சந்தையில் டான்செம் நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது.

## 6.5 2020-21 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு

2020-21 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் 8,13,863 மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 8,08,340 மெ. டன் விற்பனை செய்துள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு:-

| விபரம் | அரியலூர் | | ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | புதிய ஆலை | பழைய ஆலை | | |
| சிமெண்ட் உற்பத்தி (மெ.டன்) | 2,97,799 | 3,51,544 | 1,64,520 | 8,13,863 |
| சிமெண்ட் விற்பனை (மெ.டன்) | 2,96,506 | 3,51,546 | 1,60,288 | 8,08,340 |

2020-21 ஆம் ஆண்டிற்கான விற்றுமுதல் (Turn over) ரூபாய் 423 கோடி ஆகும்.

## 6.6 2021-22 ஆம் ஆண்டிற்கான திட்டம்

2021-22 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது மூன்று சிமெண்ட் ஆலைகளின் மூலம் மொத்தம் 13.86 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி மற்றும் விற்பனை செய்ய உள்ளது. 13.86 இலட்சம் சிமெண்ட் உற்பத்தி செய்ய தேவைப்படும் 9.35 இலட்சம் மெ.டன் கிளிங்கர், டான்செமின் புதிய ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டு, மற்ற ஆலைகளுக்கு விகிதாசார

அடிப்படையில் விநியோகிக்கப்படும். *2021-22* ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள விற்று முதல் *(Turn over)* தோராயமாக ரூபாய் *705* கோடி மற்றும் எதிர்பார்க்கப்படும் இலாபம் ஏறத்தாழ *53* கோடியாகும்.

*31* ஜுலை *2021* வரை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் *5,23,448* மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து *5,26,500* மெ. டன் விற்பனை செய்துள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு:-

| விபரம் | அரியலூர் | | ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | புதிய ஆலை | பழைய ஆலை | | |
| சிமெண்ட் உற்பத்தி (மெ.டன்) | *2,58,735* | *1,77,713* | *87,000* | *5,23,448* |
| சிமெண்ட் விற்பனை (மெ.டன்) | *2,58,061* | *1,79,407* | *89,032* | *5,26,500* |

தற்போது பயன்பாட்டில் உள்ள தனது "அரசு" சிமெண்ட் வணிகப்பெயருடன் 'வலிமை' என்ற புதிய வணிகப் பெயர் கொண்ட சிமெண்ட், இந்த ஆண்டு வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்த டான்செம் உத்தேசித்துள்ளது.

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம், கீழக்கிடாரம், தனிச்சயம், மேலக்கிடாரம், மாரியூர் ஆகிய கிராமங்களைச் சார்ந்த சுமார் 5,236 ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி செய்யப் படுகிறது. இந்நிறுவனம், 1978ஆம் ஆண்டு முதல், வணிக ரீதியிலான உப்பு உற்பத்தியைத் துவங்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவை அடங்கும். இந்நிறுவனத்தில் 48 முழு நேர பணியாளர்களும், சுமார் 1200 பருவகால தொழிலாளர்களும் பணிபுரிகிறார்கள். அத்துடன் 300 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் இரும்பு & அயோடின் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறது. மேலும், பல்வேறு அரசு

திட்டங்களான புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு இந்நிறுவனம் இரும்பு மற்றும் அயோடின் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம் ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநில அரசுகளுக்கும் இரும்பு & அயோடின் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு வழங்கி வருகிறது.

## 7.1 குறிக்கோள்

- இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்கி அப்பகுதி மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.
- இப்பகுதியில் உப்பு உற்பத்திக்கு உகந்த சூழல் நிலவுவதால் கடல் நீரை பயன்படுத்தி உப்பு மற்றும் அதன் விளைப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்தல்.
- இரும்பு மற்றும் அயோடின் சத்து குறைபாட்டினை கட்டுப்படுத்தி, அவைகளை களையும் பொருட்டு நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய செறிவூட்டப்பட்ட உப்பினை நியாய விலையில் பொதுமக்களுக்கு வழங்குதல்.

## 7.2 தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உள்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்திக்கான பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது:

அ. இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் 5236 ஏக்கர் உப்பள நிலம்

ஆ. ஒரு மணி நேரத்திற்கு 20 டன் உற்பத்தி திறன் கொண்ட அயோடின் கலந்த கல் உப்பு ஆலை

இ. ஒரு மணிநேரத்திற்கு 3.6 டன் உற்பத்தி திறன் கொண்ட இரும்பு & அயோடின் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு ஆலை

ஈ. ஒரு மணி நேரத்திற்கு 7 டன் வீதம், வருடத்திற்கு 40,000 டன் உற்பத்தி திறன் கொண்ட சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆலை

## 7.3 நிறுவனத்தின் செயல்பாடுகள்

### 7.3.1 தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி

மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் கடல் நீரை பயன்படுத்தி, ஆண்டிற்கு சுமார் 1.75 இலட்சம் டன் தொழிலக தரமுடைய உப்பினை வாலிநோக்கத்தில் உற்பத்தி செய்கின்றது. இவ்வுப்பு தமிழ்நாடு மட்டுமின்றி ஆந்திர பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களிலுள்ள குளோர்

அல்கலி தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், பல தனியார் உப்பு சுத்திகரிப்பு நிலையங்களும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பை உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடம் உப்பினைக் கொள்முதல் செய்து வருகிறது.

### 7.3.2 செறிவூட்டப்பட்ட உப்பு

இந்நிறுவனம் 1990ஆம் ஆண்டு முதல் செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்யத் தொடங்கியது. அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, மற்றும் அயோடின் மற்றும் இரும்பு இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகிய உப்பு வகைகளை குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின், அனைவரும் அயோடின் உப்பு பயன்படுத்தும் திட்டத்தில் *(Universal Salt Iodisation Programme)*, இந்நிறுவனம் பெரும் பங்காற்றியுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1998 முதல் 2020ஆம் ஆண்டு வரை 7,33,401 டன் அயோடின் உப்பினை விநியோகித்துள்ளது.

இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்டது) புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் *31.03.2021* வரையில் *45,954* டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பை தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசத்திற்கு வழங்கியுள்ளது.

### *7.3.3* உப்பு பாத்திகள் அமைத்தல்

பாவ்நகரிலுள்ள மத்திய உப்பு மற்றும் கடல்சார் ஆராய்ச்சி மையத்தின் *(CSMCRI)* மூலம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில், எந்திரம் மூலம் உப்பு உற்பத்தி செய்ய ஏதுவாக உப்பு பாத்திகள் அமைக்கும் பணி *2020-21* ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, *2021-22* ஆம் ஆண்டு *22.5* ஏக்கரில் கூடுதலாக விரிவுபடுத்தப்பட்டது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், இந்த புதிய உப்பு பாத்திகளில் இவ்வாண்டு உப்பு உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

### *7.3.4* அயோடின் கலந்த கல் உப்பு தொழிற்சாலை மேம்படுத்துதல்

அயோடின் கலந்த கல் உப்பு தற்போது கைமுறையாக *(Manually)* உறையிடப்படுகின்றது. இதனை சுகாதார முறையில் உறையிடவும் மற்றும் உப்பு வீணாவதை தவிர்க்கவும், தற்போது உள்ள அயோடின் கலந்த கல் உப்பு தொழிற்சாலை தானியங்கி உறையிடுதல் இயந்திரம் பொருத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அயோடின் கலந்த கல் உப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மட்டும் விற்பனை செய்யப்படுகின்றது. இந்த மேம்படுத்தப்பட்ட தொழிற்சாலை மூலம் கல் உப்பு விற்பனையை டாடா கெமிக்கல்ஸ் மற்றும் *ITC* போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### *7.3.5* கடல்நீர் இறைக்கும் இறைவை நிலையத்தின் திறனை அதிகரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், மன்னார் வளைகுடா கடலில் இருந்து கடல் நீரை இறைத்து, உப்பு உற்பத்தி செய்து வருகிறது. உப்பு உற்பத்திக்கு முக்கிய மூலப் பொருள் கடல் நீர் ஆகும். தமிழ்நாடு உப்பு நிறுவனம், தனது உப்பு

உற்பத்தியை வருடத்திற்கு *2.5* இலட்சம் டன் அளவிற்கு அதிகரிக்க தற்போதுள்ள இறைவை நிலையத்தில் மேலும் இரண்டு குழாய் அமைத்து, இறைவை திறனை அதிகரிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது.

### *7.3.6* புரோமின் தயாரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், சௌத் இந்தியா புரோமின் *&* அலைடு கெமிக்கல்ஸ், தூத்துக்குடி என்ற நிறுவனத்துடன் இணைந்து உப்பு உற்பத்தியில் கிடைக்கும் பிட்டன் *(bittern)* என்ற கழிவு நீரிலிருந்து, புரோமின் உற்பத்தி செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு உப்பு நிறுவனம், உப்பு உற்பத்திக்கு பிறகு கிடைக்கும் கழிவு நீரை (பிட்டன்), மேற்கண்ட நிறுவனத்திற்கு புரோமின் தயாரிக்க வழங்கி வருகிறது. இதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் *10* இலட்சம் வருவாய் ஈட்டி வருகிறது.

### *7.3.7* தரச்சான்றிதழ்

இந்நிறுவனம் அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் *IS 7224:2006* மற்றும் *IS 16232:2014*

அளவீட்டின்படி உற்பத்தி செய்வதற்கு அனுமதி சான்றிதழ்கள் பெற்றுள்ளது. இருவித செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்திட இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் *(FSSAI)* சான்றிதழினையும் பெற்றுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் தர நிர்வாக அமைப்பின் தரம் மேம்படுத்தப்பட்டு, தற்போது *ISO 9001:2015* தரச்சான்றிதழை பெற்றுள்ளது.

### *7.4* *2020-21* ஆம் ஆண்டிற்கான விற்பனை செயல்பாடுகள்

| வ எண் | விவரம் | விற்பனை (டன்னில்) |
|---|---|---|
| *1* | தொழிலக தரமுடைய உப்பு | *98,827* |
| *2* | அயோடின் கலந்த கல் உப்பு | *17,798* |
| *3* | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | *20,075* |
| *4* | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | *551* |

*2020-21* ஆம் ஆண்டு, *23,143* டன் செறிவூட்டப்பட்ட உப்பினை பொது விநியோகத் திட்டம் மற்றும் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்திற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், *2020-21*ஆம் நிதியாண்டில் ரூபாய் *35.68* கோடி விற்றுமுதல் செய்துள்ளது.

## 7.5 தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முக்கிய வாடிக்கையாளர்கள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் உற்பத்தி செய்யப்படும் தொழிலக தர உப்பின் தரம், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநில குளோரோ அல்கலி தொழிற்சாலைகளால் நன்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ், தாரங்க தாரா கெமிக்கல் ஒர்க்ஸ், ஸ்ரீ ராயலசீமா அல்கலி அண்டு கெமிக்கல்ஸ், திருவாங்கூர் கொச்சின் கெமிக்கல்ஸ், தமிழ்நாடு பெட்ரோ புரடாக்ட்ஸ், கேம்ப்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், மற்றும் கேம் பெப் அல்கலி லிமிடெட் ஆகியோர் முக்கிய வாடிக்கையாளர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், செறிவூட்டப்பட்ட உப்பினை அனைத்து தமிழ்நாடு அரசு திட்டங்களுக்கும் விற்பனை செய்கிறது. மேலும், ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களுக்கும் விற்பனை செய்கின்றது.

## 7.6 தொழிலாளர் நலன்

வாலிநோக்கம் உப்பளத்தில் சுமார் 1200 தொழிலாளர்கள் ஈடுப்படுத்தப்பட்டு அவர்களுக்கு கீழ்வரும் உதவிகளை வழங்குகின்றது.

- தமிழ்நாடு உப்பு நிறுவனம் தமது தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்துடன் சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நன்மைகளான ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பணிக்கொடை, ஊழியர் வருங்கால வைப்புநிதி ஆகியவையும் வழங்குகின்றது.
- இந்நிறுவனத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பணிக்காலத்தில் மரணமடைந்தால், அன்னாரின் வாரிசுதாரருக்கு ரூபாய் 1 இலட்சம் நிதி உதவி வழங்குகின்றது.
- தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது
- தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி அவர்கள் அணிவதற்காக கருப்பு நிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல் துண்டு போன்றவை ஆண்டுக்கொரு முறை வழங்கப்படுகிறது.
- குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

## 7.7 உப்பு உற்பத்தியாளர்களுக்கு முகவாண்மை அமைப்பு

இந்தியாவின் மூன்றாவது பெரிய உப்பு உற்பத்தியாளராக தமிழ்நாடு உள்ளது. ஆண்டுக்கு 25 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில்

ஒன்பது மாவட்ட கடலோர பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. 4108 சிறு, குறு மற்றும் பெரிய உப்பு உற்பத்தியாளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் சுமார் 48,406 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் சுமார் 95% உப்பு உற்பத்தி, தனியார் உப்பு உற்பத்தியாளர்களால் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண்.104, தொழில் (எம்.ஐ.எப்.2) துறை, நாள் 14.09.2018ன்படி தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை முகவாண்மை அமைப்பாக நியமனம் செய்துள்ளது.

## 7.8 COVID-19 நிலைமை மேலாண்மை

கொரோனா பெருந்தொற்றினால் அமல்படுத்தப்பட்ட முழு ஊரடங்கு காலத்தில் உப்பு உற்பத்தியாளர்கள் சரக்கு வாகனப் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் தொழிற்சாலை நடைமுறை கட்டுப்பாட்டினால் சிரமங்களை எதிர்கொண்டனர். உப்பு உற்பத்தியாளர்கள் தொடர்ந்து உப்பு உற்பத்தி செய்ய, முகவாண்மை அமைப்பை உதவுமாறு கேட்டுக் கொண்டனர். முகவாண்மை அமைப்பு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் தொடர்பு கொண்டு, தொடர்ந்து

உப்பு உற்பத்தி செய்யவும், தொழிலாளர்கள் பணிக்கு செல்லவும், வெளிமாவட்ட தொழிலாளர்கள் பணிக்கு செல்லவும், சரக்கு போக்குவரத்துக்கும் தேவையான ஏற்பாடுகளை செய்தது.

மேலும், இந்த பேரிடர் காலத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு உப்பு நிறுவன அலுவலகம் மற்றும் தொழிற்சாலையின் அனைத்து இடங்களிலும் வாராவாரம் கிருமி நீக்கம் செய்யப்பட்டது. வாலிநோக்கம் ஆரம்ப சுகாதார மருத்துவமனை மூலமாக அலுவலர் மற்றும் தொழிலாளர்களுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது.

## *7.9* *2021-22*ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

### *i.* விற்பனை இலக்கு

| வ.எண். | விவரம் | அளவு (டன்னில்) |
|---|---|---|
| *1* | தொழிலக தரமுடைய உப்பு | *75,000* |
| *2* | அயோடின் கலந்த கல் உப்பு | *24,500* |
| *3* | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | *10,850* |
| *4* | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலக்காத தூள் உப்பு | *10,000* |
| *5* | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | *900* |

*ii.* *2021-22*ஆம் ஆண்டிற்கு, ரூபாய் *38* கோடி விற்றுமுதல் எய்த திட்டமிடப்பட்டுள்ளது.

*iii.* தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை மொத்த விற்பனையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய முயற்சிகளை மேற்கொள்ளும்.

*Blank Page*



வாலி நோக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு உப்பு நிறுவன வளாகத்தின் வான் வழி தோற்றம்

*Blank page*

## 8. சர்க்கரைத் துறை

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுத்துறை, 2 பொதுத்துறை மற்றும் 24 தனியார் துறை ஆகியவற்றை உள்ளடக்கி மொத்தம் 42 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 12 கூட்டுறவுத்துறை 2 பொதுத்துறை மற்றும் 14 தனியார் துறை ஆக மொத்தம் 28 சர்க்கரை ஆலைகள் மட்டுமே 2020-21 அரவைப் பருவத்தில் இயக்கப்பட்டன. குறைந்த எண்ணிக்கையில் சர்க்கரை ஆலைகள் இயங்கியதற்கு மாநிலத்தின் கரும்பு உற்பத்தி குறைந்தது முக்கிய காரணமாகும்.

புதிய உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு இரகம் இல்லாமை, சமீப வருடங்களாக மாறுபடும் பருவமழை, அதிகரிக்கும் கரும்பு உற்பத்தி செலவினம், பண்ணைத்தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் நான்கு அரவைப் பருவங்களாக உயர்த்தப்படாத கரும்பு விலை ஆகிய காரணங்களால் மாநிலத்தின் கரும்பு உற்பத்தி மற்றும் ஆலைகளின் அரவைத் திறன் பயன்பாடு குறைந்துள்ளது. இதன் விளைவாக சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகரித்த காரணத்தினால் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கடும்

நிதிச்சிக்கலில் உள்ளதோடு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கரும்பு கிரையத்தொகை வழங்க இயலாத நிலையில் உள்ளன.

சர்க்கரை ஆலைகள், இலட்சக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு கரும்பு சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் அதனை சார்ந்த சேவைகள் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கும் ஆதாரமாக உள்ளன. எனவே, கரும்பு உற்பத்தியை அதிகரித்தல், சர்க்கரை கட்டுமானத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆலைகளின் உப உற்பத்தி பொருட்களின் மதிப்பினை கூட்டுதல் ஆகியவற்றின் மூலமாக சர்க்கரை ஆலைகளின் நிதி நிலையினை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உறுதி பூண்டுள்ளது.

## *8.1* சர்க்கரைத் துறை

சர்க்கரைத் துறை ஆணையரின் தலைமையின் கீழ் சர்க்கரைத் துறை இயங்கி வருகிறது. சர்க்கரைத் துறை ஆணையர் மாநிலத்தின் கரும்பு ஆணையராகவும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் செயல் பதிவாளராகவும்

மற்றும் தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 1974ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல், சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்தல், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் தமிழ்நாடு சர்க்கரை கழகம் இயங்கி வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரா சர்க்கரை ஆலை ஆகியவை தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மேற்கூறிய 3 சர்க்கரை ஆலைகளில் மதுரா சர்க்கரை ஆலை 28.2.2005-லிருந்து இயக்கத்தில் இல்லை.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் 1961ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு சர்க்கரைத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின்

தலைமைக் கூட்டுறவு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், உறுப்பினர் சர்க்கரை ஆலைகளின் செயல்பாட்டினை எளிதாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், வேதிப்பொருட்கள், பாலி புரொப்பளின் பைகள், கோணிப்பைகள், சுட்ட கல் சுண்ணாம்பு மற்றும் மசகு எண்ணெய், பேரிங்குங்கள் போன்றவற்றை மையப்படுத்தப்பட்ட கொள்முதல் செய்தல் மற்றும் சர்க்கரை மற்றும் உப உற்பத்தி பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் அலகான செங்கல்பட்டிலுள்ள உயிரியல் ஆய்வு மையம், இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி துறையால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் உயிர் இடுபொருட்கள் உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனமானது, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் விவசாயிகளுக்கு தேவையான உயிர் உரங்கள் மற்றும் உயிர் பூச்சிகொல்லிகள் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

## 8.2 கரும்பு உற்பத்தித் திறன் மற்றும் கரும்பு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

கரும்பு உற்பத்தியைத் தக்க வைக்கவும், பயன்படுத்தப்படும் ஒரு துளி நீருக்கு அதிக மகசூல் கிடைப்பதை உறுதி செய்யவும், நுண்ணீர் பாசனத்தின் கீழ் அதிக பரப்பைக் கொண்டு வர பல முனை உத்திகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நுண்ணீர் பாசனத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

நுண்ணீர் பாசனத் திட்டத்தினை செயல்படுத்துவதோடு நிலையான கரும்பு உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துதல், கோ 86032 புத்துயிரூட்டுவதற்காக இனப்பெருக்க விதைக்கரும்பு மற்றும் திசு வளர்ப்பு நாற்றுகளை விநியோகித்தல், இதர புதிய கரும்பு இரகங்களின் நாற்றுக்களை வினியோகித்தல், கரும்பு தோகைகளை தூளாக்குதல், தரமான பரு சீவல் நாற்றுகளை விநியோகித்தல், ஊடுபயிர் பயிரிடுதல், மனித ஆற்றலினால் இயக்கப்படும் கரும்பு சோகையினை தூளாக்கும்

கருவிகளை விநியோகித்தல், உயிரி கட்டுபாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஹைடிராலிக் டிப்ளர் நிறுவுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரும்பு சாகுபடி செலவைக் குறைப்பதற்காக கரும்பு சாகுபடி நடவடிக்கைகளை இயந்திரமயமாக்கல் வலியுறுத்தப்பட்டு வருகிறது. விளைச்சலை மேம்படுத்தவும் மற்றும் மனித உழைப்பை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் வேளாண் பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்தின் கீழ் கரும்பு விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திர கலப்பை, களை எடுக்கும் கருவி, சுழல் கலப்பை, தோகை தூளாக்கும் கருவி மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் ஆகிய பல்வேறு பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூரிலுள்ள கரும்பு இனப்பெருக்க நிறுவனம் பல்வேறு பரிசோதனைகள் மூலம் கோ 11015 என்ற புதிய கரும்பு இரகத்தை தற்போதுள்ள கோ 86032 கரும்பு இரகத்தை விட தரம் மற்றும் மகசூலில் சிறப்பாக உள்ளதாக கண்டறிந்துள்ளது. அனைத்து சர்க்கரை ஆலைகளிலும்

இந்த இரகத்தின் கீழ் அதிக பரப்பளவு கிடைப்பதை உறுதி செய்து, மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானம் ஆகியவற்றை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் இந்த இரகக் கரும்பு 10,658 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.

### 8.3 2020-21 அரவைப் பருவ செயல்பாடு

தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் 2020-21 ஆம் அரவைப் பருவத்தில் 31.05.2021 வரை, 72.49 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.12 விழுக்காடு கட்டுமானத்துடன் 6.67 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### 8.4 விற்பனை வருவாய்

#### 8.4.1 சர்க்கரை விற்பனை வருவாய்

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 2020-21 ஆம் நிதியாண்டில் 1.90 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டு ரூபாய் 655.48 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 8.4.2 கரும்புச் சக்கை விற்பனை வருவாய்

சர்க்கரை ஆலை மற்றும் இணைமின் நிலைய எரிபொருள் தேவைக்கு எஞ்சிய கரும்பு சக்கையானது காகித தொழிற்சாலை மற்றும் உயிர் ஆற்றல் அலகுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2020-21ஆம் நிதியாண்டில் 18,202 மெட்ரிக் டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டு ரூபாய் 4.16 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 8.4.3 கரும்புக் கசண்டு விற்பனை வருவாய்

அமராவதி மற்றும் சேலம் வடிப்பாலைகளின் தேவையினை பூர்த்தி செய்த பின்னர் எஞ்சிய கரும்பு கசண்டு தனியார் வடிப்பாலைகள், கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2020-21ஆம் நிதியாண்டில் 1.43 இலட்சம் மெட்ரிக் டன் கரும்புக் கசண்டு விற்பனை செய்யப்பட்டு ரூபாய் 128.51 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 8.4.4 எரிசாராய விற்பனை வருவாய்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகளில் 2020-21ஆம் நிதியாண்டில் 10 இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்யப்பட்டு ரூபாய் 4.63 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 8.5 இணைமின் மற்றும் ஆலை நவீன மயமாக்கல் திட்டம்

சர்க்கரை ஆலைகளின் செயல்பாட்டை மேம்படுத்திட ஒரு முக்கிய நடவடிக்கையாக இணைமின் நிலையம் அமைத்தல் மற்றும் ஆலை நவீனமயமாக்கல் திட்டத்தினை, 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரையில் செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் ஆகிய 5 சர்க்கரை ஆலைகளில் இணைமின் திட்டம் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது. இந்த 5 ஆலைகளும் 2020-21 ஆம் நிதியாண்டில் 646.981 இலட்சம் அலகு மின்சாரத்தை மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளன.

சேலம், சுப்ரமணியசிவா, தர்மபுரி, கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் ஆகிய 10 ஆலைகளில் ஆலை நவீனமயமாக்கும் திட்டம் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

## 8.6 2021 - 22 க்கான முக்கிய செயல் பணிகள்

1) 2020 ஆம் ஆண்டில் பெய்த நல்ல மழையளவை (984.6 மி.மீ) பயன்படுத்தி, 2020-21 நடவுப் பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பை 1.25 இலட்சம் ஹெக்டேராக

உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2) புதிய உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கோ 11015 இரகத்தை தமிழ்நாட்டில் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், சர்க்கரை கட்டுமானத்தை அதிகரிக்கும் வகையில், புதிய கரும்பு இரகங்களாகிய CoG 6 மற்றும் CoC 13339 ஆகியவற்றை அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3) கரும்பு, நீர்த் தேவை அதிகம் கொண்ட பயிராகும். கரும்பு பயிருக்கான நீர்த் தேவையை குறைக்கவும், கரும்பு உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும், 35,000 ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் மானியத்துடன் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தங்கம் தென்னரசு**
**தொழில் துறை அமைச்சர்**